இலஞ்சம் தவிர்
களம் -21

நெஞ்சம் நிமிர்
வெற்றி -09

# நேர்மை நெறி

செப்டம்பர் 2023

(ஊழல் எதிர்ப்பு இயக்கத்தின் திங்களிதழ்)

(NERMAI NERI) (REG.NO.349/2001)

கெடுவல்யான் என்பது அறிகதன் நெஞ்சம்
நடுஓரீஇ அல்ல செயின்.

₹ 10

## ஊழல் பேர்வழிகளால் ஒரு மாநிலத்தின் முன்னேற்றம் சாத்தியமற்றது.




## ஊழல் நம் நாட்டின் சாபம்

PUBLISHED BY
ஊழல் எதிர்ப்பு இயக்கம் சென்னை

பதிவு மற்றும் செயல் அலுவலகம்:
155, "நம்பகம்", கொன்னூர் நெடுஞ்சாலை,
அயனாபுரம், சென்னை-600023
தொலைபேசி எண்: 044 2674 1007
e-mail : acmchennai2001@yahoo.co.in
website : anticorruptionchennai.com

**நேர்மையானவர்களின் வாழ்வில் சில சம்பவங்கள்**

## தீபாவளி சீதனம்

"லோகமான்யா!" என்றழைக்கப்பட்டவர் பாலகங்காதர திலகர். லோகமான்யா என்றால் மராட்டிய மொழியில் "மக்களின் தலைவர்" என்று பொருள். இந்திய சுதந்திரப் போராட்டத்தின் போது "சுயராஜ்ஜியமே எனது பிறப்புரிமை" என்று முழங்கிய தீரர்.

அவருக்கு பதினைந்து வயது மாணவப் பருவத்திலேயே திருமணம் நடந்தது. தபீபாய் என்ற பெண்மணியை அவர் மணந்தார். மராட்டிய மாநிலத்தில் தீபாவளியன்று மாப்பிள்ளைகளுக்கு சீர்வரிசைகள் அதிகமாகச் செய்வார்கள். பாலகங்காதர திலகர் தீபாவளிப் பண்டிகையைக் கொண்டாடத் தன் மாமனார் வீட்டுக்குச் சென்றார். அவர் தீபாவளிச் சீதனமாக மாமனாரிடம் கேட்ட பொருட்கள், மாமனாரை வியப்பில் ஆழ்த்தியது.

"எனக்கு ஆடை ,அணிகலன், ஆடம்பரப் பொருட்கள் என்று எதுவுமே வேண்டாம். அறிவை பெருக்கும் நல்ல நூல்களை வாங்கித் தாருங்கள்: அது போதும்!" என்றார். அவரது மாமனார் மிகுந்த மனநிறைவோடு தீபாவளிச் சீதனமாக ஏராளமான நூல்களை வாங்கி அவருக்குக் கொடுத்தார்.

இன்று ஒவ்வொரு மாப்பிள்ளையும் திலகர் போல் நடந்து கொண்டால், வரதட்சணைக் கொடுமை ஏது? வரதட்சணை சாவு ஏது?



## அரசியல் தலைவர்கள் மீதான கிரிமினல் வழக்குகள்- நீதிமன்ற ஊழல்

நம் இயக்க உறுப்பினர்கள் அனைவரும், செய்தித்தாள்கள் மூலம், தமிழ்நாட்டில், அரசியல் தலைவர்கள் மீது புனையப்பட்ட கிரிமினல் வழக்குகள் எவ்வாறு ரத்து செய்யப்படுகிறது என்பதையும், இந்த முறையற்ற குற்ற செயலுக்கு சென்னை உயர்நீதிமன்ற தலைமை நீதிபதி வரை துணை போய் இருந்துள்ளார் என்பதுவும், நீதித்துறையில் ஊழல் புரையோடிப் போய் இருக்கும் அவல நிலையை, மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற நீதிபதி திரு ஆனந்த் வெங்கடேஷ் அவர்கள் தமது உத்தரவில் வெளிச்சம் போட்டு காட்டியுள்ளார். ஆக, ஆளும் கட்சியின் அமைச்சர்கள், கட்சி பேதம் இன்றி குற்ற வழக்குகளில் இருந்து , அதுவும் நீதிபதிகள் துணையுடன் தப்பிப்பது சில ஆண்டுகளாக வாடிக்கையாக இருந்து வந்துள்ளது தெரிகிறது. இதில் கடைபிடிக்கப்பட்ட வழிமுறை யாதெனில், லஞ்ச ஒழிப்புத்துறை, ஒரு கட்சியின் ஆட்சியின் போது, எதிர்க்கட்சி தலைவர்கள் மீது வழக்கு தொடுப்பதும், அந்த எதிர்க்கட்சி மீண்டும் ஆட்சிக்கு வந்ததும், மீண்டும் குற்றப்புலனாய்வு செய்ய ஒரு இடைக்கால மனு தாக்கல் செய்யப்படுவதும், அதை நீதிமன்றங்களும் அங்கீகரிதது , மீண்டும் விசாரிக்க உத்திரவு இடுவதும் வாடிக்கையாக இருந்துள்ளது தேற்கிறது.

இந்த நீதிமன்ற உத்தரவை காரணம் காட்டி, மீண்டும் விசாரணை செய்வதாக பாவலா காட்டி, மீண்டும் விசாரணை செய்ததில் குற்றம் நிரூபணம் ஆகவில்லை என்று ஒரு பொய்யான அறிக்கை தயாரித்து நீதிமன்றத்தில் சமர்ப்பித்து அதன் அடிப்படையில் குற்றவாளிகளை தப்பிக்க விடுவது வாடிக்கையாக இருந்து வந்துள்ளது.

எனவே நமது இயக்கம், இந்த அவல நிலையை எதிர்த்து சட்டப்போராட்டம் நடத்த முடிவு செய்து சென்ற செயற்குழு கூட்டத்தில் முடிவெடுத்துள்ளது. அதன்படி எவ்வளவு பெரிய இடையுறுகள் வந்தாலும், மக்கள் பணத்தை கொள்ளை அடித்தவர்களை சட்டத்தின் முன் நிறுத்தி உரிய தண்டனை பெறும் வரை போராடுவது என்றும், இது போன்ற கேவலமான நிகழ்வுகள் இனியும் நடக்காத வண்ணம் உரிய வழிவகைகளை வகுக்கவும் சட்டங்களை திருத்தவும் தொடர்ந்து போராடுவது என்றும் முடிவெடுத்து இயக்கம் செயல்பட்டு கொண்டு இருக்கிறது. எனவே இந்த நீண்ட நெடிய சட்டப் போராட்டத்திற்கு உறுப்பினர்கள் தங்களை தயார் செய்து கொண்டு தங்களால் இயன்ற வரைக்கும் முழு ஒத்துழைப்பு நல்குவதொடு, ஒவ்வொரு கிளை மற்றும் மாவட்டங்களில் இது போன்ற ஊழல் குற்றச்சாட்டு எதிராக தாங்களும் ஆவணங்களை திரட்டி ஒவ்வொரு கிளையும் அல்லது மாவட்டங்களும் தனித்தனியாக போராட முன் வர வேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறோம்.

இப்பணியில் நாம் பல்வேறு இன்னல்களை சந்திக்க நேரிடும். அது போன்ற தருணங்களில் சிறிதும் பயமின்றி நாம்,அமைதியான, அஹிம்சை வழியில் தொய்வின்றி ஒவ்வொருவரும் நெஞ்சம் நிமிர்த்தி செயல்பட வேண்டும். ஒரு பத்து பேர் தியாகம் மனப்பான்மையுடன் ஊழலை எதிர்த்து போராட முன் வந்தால், மொத்த ஊழல் பிரச்சனைகளும் ஒளிந்து விடும். மக்கள் நலம் பெறுவர். எனவே இந்த நீண்ட நெடிய சட்ட போராட்டத்தில் ஒவ்வொரு உறுப்பினரும் நம்மால் ஆன பங்கை செலுத்தி ஒத்துழைக்குமாறு அன்புடன் மீண்டும் கேட்டுக்கொள்கிறோம்.

நன்றி,

**திரு ந சுப்ரமணியன்( சட்ட ஆலோசகர்)**

இயக்கத்துக்கு நன்கொடைகள் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன.
நன்கொடைகள். வருமான வரிச்சட்டம் பிரிவு 80 (G) யின் கீழ் விலக்கு(சலுகை) உள்ளது. பணத்தை கீழ்க்கண்ட வங்கிக்கு **NEFT** மூலமாக அனுப்பலாம் .
**Indian OverSeas Bank, Ayanavaram Branch (IFSC Code: IOBA0000009)**
**Savings A/C No: 000901000041657**

# எளிமையான வாழ்க்கையின் சிறப்பு

**வே. கார்த்திகை ராஜன்**
**பொது செயலாளர்**

எளிமை என்பது தோற்றத்தில் மட்டுமல்ல எளிமை என்பது மனதிலும் சுபாவத்திலும் புத்தியினுடைய அகங்காரமற்ற தன்மையிலும் கலந்து இருப்பதாகும். எளிமை என்பது தோற்றத்தை அல்ல; உயர்ந்த பண்பை வெளிப்படுத்துவதாகும். எளிமை என்பது அசுத்தம் அல்ல; அது சுத்தத்துடன் கூடிய தனித்தன்மையாகும்.

எளிமை நல்ல மனிதர்களை அருகில் வரச் செய்வதாகும். எளிமை அடக்கத்துடன் கூடியது. அடக்கம் இருக்குமிடத்தில் அமைதி இருக்கும்; அதில் எளிமை ஜோதியாக சுடர்விடும். எளிமை என்பது ஏழ்மை தன்மை அல்ல. எளிமை என்பது சாதாரண தன்மையிலும் தேஜோமயமாக விளங்குவது. எளிமை தன்மைக்குள் சிக்கனமும் இருக்கும் சேமிப்பும் இருக்கும். எளிமை என்பது ஆடம்பரமற்ற உயர்ந்த அந்தஸ்து. எளிமை ஏளனம் அல்ல; அது உயர்ந்த கோபுரம்.அ து பட்டை தீட்டப்பட்ட பிரகாசிக்கும் வைரம்.

எல்லோராலும் எளிமையாக இருந்துவிட முடியாது. அனுபவஸ்தர்கள் மட்டுமே எளிமையாக இருப்பார்கள். வாழ்க்கையின் ஆரம்ப பாடமும் எளிமை இறுதி பாடமும் எளிமை என்பதை அனுபவஸ்தர்கள் மட்டுமே புரிந்து இருப்பார்கள். அதனால் அமைதியாக எளிமையாக இருப்பவரிடம் ஏகப்பட்ட ரகசியங்கள் அடங்கியிருக்கும். அவர்கள் இவ்வுலகில் எதையும் வெளிக்காட்டிக் கொள்ளாதவர்களாக இருப்பார்கள்.

எளிமையில் சாதாரணம் இருக்கும். சாதாரணத்தில் அசாதாரணம் இருக்கும். எளிமையின் வேர்கள் எஃகு போன்றது. எளிமையில் அன்பு வெளிப்படும். எளிமையாக இருப்பது வேறு; எளிமையாககாட்டிக் கொள்வது வேறு. எளிமையாக காட்டிக் கொள்பவர்கள் எல்லாம் எளிமையானவர்கள் அல்ல. உண்மையான எளிமையானவர்களை எளிதில் அடையாளம் கண்டு கொள்ளலாம். அவர்களது பேச்சில் பணிவு இருக்கும் செயலில் நிதானம் இருக்கும். எதிலும் அவரிடம் சுயநலம் இருக்காது.

எளிமை நிறைந்தவர்கள் மகான்கள் ஆவார்கள். உண்மையான எளிமை உடையவர்கள் பிறரின் மனதின் அன்பிற்கு பாத்திரமானவர்கள். எளிமை அனைவருக்கும் இருப்பதை பகிர்ந்தளிக்கும். எளிமையான ஒருவர் எல்லோரும் தன்னுடையவர்கள் என நினைப்பார்கள். எளிமையானவர்கள் எல்லோரிடமும் இருந்தாலும் தனித்தன்மை நிறைந்து விளங்குவார்கள். எளிமையில் தெய்வீகம் வெளிப்படும்.

- எளிமை என்பது உரக்கப் பேசாதது.
- பிறர் மனம் புண்பட பேசாதது எளிமை.
- எளிமை இருக்குமிடத்தில் கடின வார்த்தைகள் வெளிப்படாது.
- எளிமை சாந்தத்தை பிறருக்கு போதிக்கும்.
- எளிமை என்ற குணம் யாவரையும் கை வணங்கச் செய்யும்.
- எளிமையானவர்கள் எப்பொழுதும் இனிமையானவர்கள்.
- கோபம் இல்லாத இடமே எளிமை நிறைந்த இடம்.
- பொறாமை இல்லாத இடமே எளிமை நிறைந்த இடம்.
- ஆணவம் இல்லாத இடத்தில் எளிமை வீற்றிருக்கும்.

எளிமையானது, தந்தை ஈசன் வீற்றிருக்கும் இடமாகும். தந்தை ஈசன் எளிமையானவர் என்பதற்காக அவருக்கு எளிமையான ஆடைகளே அணிவிக்கப்படுகின்றது. இதன் காரணமாக அவரது அடியார்களும் மிக எளிமையான ஆடைகளையே அணிகின்றனர். திருநீறு அணிவது கூட எளிமையின் அடையாளம் ஆகும். மூன்று பட்டைகளின் அடையாளம் கூட எளிமையாக இரு; அன்பாக இரு; அமைதியாக இரு என்பதாகும். ஏனெனில் இவ்வுலகில் எல்லாமே ஒரு நாள் சாம்பலாக கூடியது என்பதாக பொருள்படும்.எளிமையில் தான் ஆன்ம நிலை வெளிப்படும். எளிமையான ஒருவர் முகத்தில் ஆன்ம ஜோதி பிரகாசிக்கும். எல்லாம் இருந்தும் எதுவுமில்லை என்பவரே எளிமையானவர் தெளிவானவர்.

எளிமைக்கு உதாரணமாக உலகில் நிறைய மகான்கள் வாழ்ந்து சென்றுள்ளனர்.

- வாழ்வில் உயர நினைப்பவர் எளிமையுடன் சத்தியம் என்ற உயர்ந்த பண்பையும் கற்றுக்கொள்ள வேண்டும்.
- எளிமை நிறைந்தவரிடம் அனைவரும் அருகில் சென்று பழகுவர்.
- எளிமை பேசாமல் பிறருக்கு கற்றுக் கொடுக்கும் மந்திரச்சாவி ஆகும்.
- எளிமை நிறைந்த முகத்தில் மலர்போன்ற புன்னகை நிறைந்திருக்கும்.
- எளிமை நிறைந்திருப்பதால் கவலையற்ற தன்மை இருக்கும்.
- வறுமையால் எளிமை அல்ல, தம்மிடம் எவை இருந்தாலும் அவை அனைத்தும் தந்தை ஈசனுடையது என்பதே எளிமை.
- வாழ்வை உணர்ந்தவர் எளிமையாக இருப்பார். அதை உணராதவரோ ஆடம்பரம் செய்வார்.
- சிக்கனம் சேமிப்பு தயாளம் நன்னடத்தை இவை எல்லாம் எளிமையில் அடங்கியிருக்கும்.
- எளிமை நிறைந்தவர் தானாகவே உயர்ந்த நிலை அடைவார். எளிமை வேஷம் அல்ல விவேகம்.
- யாருக்கும் தீமை செய்யாமல்,தீமை நினையாமல்,தானும் எவ்விதத் துன்பமும் இன்றி பிறருக்கும் எவ்வித துன்பத்தையும் கொடுக்காமல் அமைதியாக வாழ்வதே எளிமை.
- யாரையும் ஏளனம் செய்யாததே எளிமை. ஏளனமாக இருப்பவர்களையும் ஏற்றம் செய்வதுதான் உண்மையான எளிமை.
- எளிமையானவருடைய பார்வையில் வெறுப்பு இருக்காது. அந்தப் பார்வையில் கருணை நிறைந்திருக்கும்.
- எளிமையானவர் எல்லோரையும் தனதானவராக நினைப்பார்.
- எளிமை என்பது மனித வாழ்வின் கிரீடத்தில் உயர் ரத்தினம் ஆகும். அந்த எளிமை நிறைந்த ரத்தினமானது உலகம் முழுவதும் ஒளி வீசி பிரகாசிக்கும்.
- எளிமை என்பது கோவிலில் குடியிருக்கும் தெய்வத்தின் தோற்றத்தை கொண்டவராக ஒருவரை மாற்றிவிடும்.

உலகில் ஏமாற்றுவதற்காக நிறைய மனிதர்கள் எளிமை வேஷம் போடுகின்றார்கள். ஆனால் உண்மையான மனிதனோ அதை வேஷம் என்பதை கண்டுபிடித்து விடுவான். எனவே, சத்தியமாக இருங்கள் எளிமையாக இருங்கள், அன்பாக இருங்கள், அஹிம்சை நிறைந்தவராக இருங்கள் அப்பொழுது உயர்ந்த மனிதராக உலகில் நீங்களும் ஒளி வீசும் நட்சத்திரம் ஆவீர்கள்.

---

**<u>செயற்குழுக் கூட்டம் (26 -08-2023)</u>**

இன்று (26 ஆகஸ்ட் 2023) நமது இயக்கப் பொதுச் செயலாளர் தலைமையில் செயற்குழுக் கூட்டம் நமது தலைமையகத்தில் நடைபெற்றது. கூட்டத்தில், ஆறு செயற்குழு உறுப்பினர்களும், நான்கு உறுப்பினர்கள் பார்வையாளர்களாகவும் கலந்து கொண்டனர். நமது சட்ட ஆலோசகரும் கலந்து கொண்டார். இன்று நடை பெற்ற செயற்குழுக் கூட்டத்தில் கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

1. இயக்கத்தின் 2023ம்ஆண்டு ஜூலை மாத வரவு செலவு கணக்கு வாசிக்கப்பட்டது. வரவு செலவு கணக்கு சரிதானன்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

2. 30-07-2023 அன்று திருச்சியில் நடைபெற்ற பொதுக்குழுக் கூட்டத்தில் நிறைவேறிய தீர்மானங்களை நடைமுறைப்படுத்த வேண்டுமாறு கேட்டுக் கொள்ளப்பட்ட்டது. போக்குவரத்து துறையில் ஊழல் செய்த அமைச்சர் செந்தில் பாலாஜியின் குற்ற வழக்கை தொடர்ந்து கண்காணித்து உரிய சட்ட நடவடிக்கை எடுத்து, ஊழல் செய்து பணி நியமனம் பெற்றவர்களை நீக்கி , தகுதியானவர்களுக்கு பணி உத்தரவு கிடைக்கும் வரை தொடர்ந்து சட்ட போராட்டம் நடத்துவது என்றும் தீர்மானிக்கப்படுகிறது.

3, தற்பொழுது சென்னை உயர்நீதிமன்ற நீதிபதி மாண்புமிகு திரு ஆனந்த் வெங்கடேஷ் அவர்கள் அரசியல் தலைவர்கள் மீதான குற்ற வழக்குகள், சென்னை உயர்நீதிமன்ற தலைமை நீதிபதியின் நிர்வாக உத்தரவினால் விழுப்புரத்தில் இருந்து வேலூர் மாவட்டத்திற்கு மாற்றப்பட்டு ரத்து செய்யப்பட்டதை திரும்ப விசாரிக்க உத்தரவு பிறப்பித்துள்ளார். இது குறித்து விவாதித்த உறுப்பினர்கள், நீதிபதிகள் தலையிட்டு அரசியல் தலைவர்களை காப்பாற்றுவது குறித்து அதிர்ச்சி அடைந்தனர். எனவே சம்பந்தப்பட்ட தலைமை நீதிபதி மற்றும் சம்பந்தப்பட்ட நீதிபதிகள் மீது உரிய புகார் அளித்து அவர்களுக்கும் உரிய தண்டனை பெற்று தரும் வரை, உரிய சட்ட நடவடிக்கை எடுத்து நீதித்துறையின் மாண்பைக் காப்பதென தீர்மானிக்கப்படுகிறது. மேலும், இந்தக் குற்ற வழக்குகளில் இயக்கம் தம்மை இணைத்துக்கொண்டு, குற்ற வழக்குகள் இறுதி முடிவாகும் வரை எல்லா நிலைகளிலும் (உச்ச

நீதி மன்ற வரையிலும் கூட) தொடர்ந்து செயல்பட்டு குற்றவாளிகளுக்கு உரிய தண்டனை பெற்றுத்தர தொடர்ந்து நடவடிக்கை எடுக்கத் தீர்மானிக்கப்படுகிறது.

4. இயக்கத்திற்கு இளைஞர்களை உறுப்பினர்களாக்க உரிய நடவடிக்கை எடுப்பது என தீர்மானிக்கப்படுகிறது. இயக்க உறுப்பினர்களான, திரு.காசிநாதன் மற்றும் திரு. அரங்க ராஜன் அவர்களும் தாமாக முன்வந்து, செங்கல்பட்டு மாவட்டத்தில் இயக்கியத்திற்கான கிளை மற்றும் மாவட்ட கிளைகளை ஏற்படுத்த தாங்கள் முயல்வதாகவும் எனவே தங்களுக்கு செயற்குழு அதிகாரம் அளிப்பின், தேவையான உறுப்பினர்களை சேர்த்து செங்கல்பட்டு மாவட்டத்தில் ஒரு மாவட்டம் மற்றும் கிளைகளையும் அமைக்க முடியும் என்று தெரிவித்தனர். அவர்களது கோரிக்கையை ஏற்று, அவர்கள் இருவரையும் உரிய உறுப்பினர்களை சேர்த்து, செங்கல்பட்டு மாவட்டத்தில் ஒரு மாவட்டம் மற்றும் கிளைகளையும் அமைக்க ஆவண செய்ய உரிய அதிகாரம் அளிக்கப்படுகிறது. இதற்காக பொதுச்செயலாளர் அவர்கள் அவர்கள் இருவரையும் இப்பணிக்காக நியமித்து உரிய கடிதம் வழங்குமாறும் கேட்டுக் கொள்ளப் படுகிறார்கள். தஞ்சாவுர் மாவட்டத்தையும் மாவட்டத் தகுதிக்கு உயர்த்தவும் இவர்கள் பணி தொடர வேண்டும்.

5.. நீதிமன்ற வாய்தா கேட்கும் எண்ணிக்கையைக் குறைக்க வேண்டி ஒரு வடிவு மனுவைத் தயாரிக்கும் நமது செயலாளர் (சட்டம்) திரு A நஃபீஸ் அஹமத் அவர்களை விரைவில் தயாரிக்குமாறு இந்த செயற்குழு கேட்டுக்கொள்கிறது. அதே போன்று கரூர் மவட்ட நெடுஞ்சாலைத் துறை ஊழல்,, தார்விலை வீழ்ச்சியில் ஊழல், மாவட்டக்கல்வி அதிகாரி மீதான ஊழல் புகார் ஆகியவை பற்றி யும் விவாதிக்கப்பட்டது

6. நமது இயக்கத்தின் உறுப்பினராக கீழ்க்கண்ட 14 பேர் புதிதாக விண்ணப்பித்துள்ளனர்.

<u>ஆயுள் உறுப்பினர்கள்</u>

1. **திரு S. தட்சிணா மூர்த்தி**
2. **திரு K. சுப்ரமணியன்**

<u>ஆண்டு உறுப்பினர்கள்</u>

**1 திரு P கிருஷ்ணன்**
**2 திருமதி K வை ஜெயந்தி**
**3. திரு R.பழனிவேல்**
**4. திரு இரா முத்து**
**5. திரு ந. குணசேகரன்**
**6. திருமதி இரா. மணிமேகலை**
**7. திரு ரே. பாஸ்கர்**
**8. திருமதி ம. ஆர்த்தி**
**9. திரு இரா. ஹரிஹரன்**
**10.திரு P. செல்வராஜ்**
**11 திருமதி D. அமுதா**

**<u>மாணவ உறுப்பினர்</u>**
**செல்வி S ஜனனி**

எல்லா விண்ணப்பங்களும் ஏற்றுக்கொள்ளப்பட்டு ஆண்டு உறுப்பினராகிறார்கள்.

7. அயனாவரத்திலுள்ள நமது இயக்கத்தின் பாரத ஸ்டேட் வங்கியில் **(SBI)** பணப்பரிமாற்றம் அதிகமாக நடைபெறுவதில்லை. எனவே அங்குள்ள சேமிப்புக்கணக்கை முடித்துவிடக் கோரிக்கை விடப்பட்டுள்ளது . நமது இயக்கத்தின் இண்டியன் ஓவர் சீஸ் வங்கியின் **(IOB)** சேமிப்பு வங்கி மட்டும் தொடந்து செயல் படுமாறு முடிவு எடுக்கப்பட்டது.

8. இறுதியில் பொது செயலாளர் நன்றி கூறக் கூட்டம் இனிதே முடிவுற்றது.

ஒப்பம்

**வே கார்த்திகை ராஜன்**
**பொது செயலாளர்**

## உலகத் திருடர்களில் முதலிடம் பிடித்த அதானி!

உலகப் புகழ் பெற்ற "தி கார்டியன்" பத்திரிக்கையும், 'ஃபைனான்சியல் டைம்ஸ்' ம் பிரதமர் மோடியின் நண்பர் அதானி குழுமத்தின் மோசடிகளை சர்வதேசத்திற்கும் அம்பலப்படுத்தி உள்ளன! மோடி பிரதமரான பிறகு 28,14,200 கோடிகள் அதானி சம்பாதித்து உள்ளாராம். அமெரிக்காவின் OCCRP அதிரடி அறிக்கை!

பிரிக்ஸ் உச்சி மாநாட்டிலிருந்து திரும்பிய கையோடு "சந்திராயன்-3" வெற்றியை ஏதோ தனது வெற்றியாக காட்டிக் கொள்ள தலைகீழாக நின்றார் நமது "விஷ்வ குரு" மோடி. பக்தர்களின் பஜனையில் மயங்கி இருந்த மோடிக்கு "கோடையிடியாக" நேற்று ஒரு செய்தி வந்தது.

சர்வதேச தரமும், புகழும் வாய்ந்த "தி கார்டியன்" மற்றும் "ஃபைனான்சியல் டைம்ஸ்" என்ற இரண்டு பத்திரிக்கைகளில் மோடிக்கு நெருக்கமான அதானி குழுமத்தின் மோசடிகளை அம்பலப்படுத்தி ஆதாரபூர்வ செய்திக் கட்டுரைகள் வந்து மோடியின் தூக்கத்தை கெடுத்தன.

ஹிட்டன்பர்க் அறிக்கையை சுட்டிக்காட்டி, மோடிக்கும் அதானிக்கும் இடையிலான கள்ள உறவை கேள்வி கேட்ட ராகுல் காந்தியை அவதூறு வழக்கு மூலம் தண்டித்து, பதவி நீக்கம் செய்து தப்பித்தோம் என்று எண்ணியிருந்த மோடிக்கு, மீண்டும் தலைவலியாக சமீபத்திய செய்தி வந்துள்ளது.

அதானி குழுமம் ஏறத்தாழ 8,000 கோடிகளை (1 பில்லியன் டாலர்) இந்தியாவிலிருந்து வெளியேற்றி மொரீஷியஸ் போன்ற தீவுகளில் பதிவு செய்த பல்வேறு போலி (ஷெல் கம்பெனிஸ்) நிறுவனங்கள் மூலம் மீண்டும் இந்தியாவிற்குள் கடத்தி வந்து அதானி குழும பங்குகளில் முதலீடு செய்துள்ளது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. 'ஆர்கனைஸ்டு கிரைம் மற்றும் கரப்ஷன் ரிப்போர்ட்டிங் ப்ராஜெக்ட்' (ஒருங்கிணைந்த குற்றச் செயல் மற்றும் ஊழல் குறித்த அறிக்கை) என்ற அமைப்பு இந்த மோசடிகளை ஆதாரபூர்வமாக வெளிக் கொண்டு வந்துள்ளது.

மொத்தம் 13 போலி கம்பெனிகள் அல்லது அதானி குழுமத்தின் பினாமி கம்பெனிகளது நிதி முதலீட்டையும் அதன் போக்கையும் பல ஆண்டுகளாக செபி அமைப்பு "விசாரித்துக்கொண்டு" இருக்கையில், அவற்றில் இரண்டே இரண்டு பினாமிகளான துபாயைச் சார்ந்த நாசர் அலி என்பவரும் சீனத்தை சார்ந்த சாங் சுங்-லிங் என்பவரும் இந்திய ஒழுங்குமுறை நிறுவனங்கள் கண்ணில் மண்ணைத் தூவி விட்டு, அதானி குழுமத்தில் முதலீடு செய்து சட்டத்திற்கு புறம்பாக 'ஆப்ஷோர்' அக்கவுண்ட்கள் மூலம் பங்குகளை வாங்கி உள்ளனர். இதன் மூலம் இந்திய சட்டங்களை மீறியும், போலியாக பங்கு விலையேற்ற மோசடிகளை செய்தும் கொள்ளையடித்தது ஆதாரங்களுடன் அம்பலத்திற்கு வந்துள்ளது.

நாசர் அலி, சாங் சுங்-லிங் ஆகிய இவ்விருவரும் கௌதம் அதானியின் மூத்த சகோதரரான வினோத் அதானியின் கைப்பாவைகள் என்பதும் பல்வேறு ஆதாரங்களுடன் இந்த அமைப்பு வெளியிட்டுள்ளது. 'மோடிக்கு நெருக்கமான அதானியின் முறைகேடுகள்' என்று "தி கார்டியன்" பத்திரிக்கையும், 'பிரதமர் மோடி சம்பந்தப் பட்ட அதானி குழுமத்தின் மோசடி' என்று ஃபைனான்சியல் டைம்ஸ் பத்திரிக்கையும் இந்தியாவில் முடைநாற்றமெடுக்கும் ஊழலையும், ஆட்சியாளர்களின் சார்பு நிலையையும் பட்டவர்த்தனமாக்கி செய்தி வெளியிட்டுள்ளன.

எடுத்தற்கெல்லாம் தனக்கு வேண்டாத எதிர்கட்சிகள் மீதெல்லாம் அமலாக்கத் துறையையும், வருமான வரித்துறையையும், சி.பி ஐ அமைப்பையும் ஏவி விடும் மோடி அரசு, கண் முன்னே பல்லாயிரம் கோடிகளை இந்தியாவிலிருந்து கடத்தி, பின்பு பினாமிகள் மூலம் மீண்டும் இந்தியவிற்குள் நுழைப்பது மணி லாண்டரிங் இல்லையா? இவர்கள் மீது கடுமையான அமலாக்கத் துறை பாயாதா? பி.எம்எல்ஏ சட்டங்கள் எல்லாம் வழிக்கு வராத எதிர் கட்சி தலைவர்கள் மீதுதான் பாயுமா? அயோக்கிய சிகாமணி அதானி மீது பாயாதா என்ற பல கேள்விகள் நாட்டினர் மனதில் தோன்றுவது இயற்கை.

நினைத்ததை எல்லாம் வாங்கி குவிக்கும் அதானியின் வளர்ச்சி "வீக்கம்" யாரால் வந்தது? இதற்கு உதவி செய்வது யார்? என்பது ஊர் உலகத்திற்கே தெரிந்திருக்கும் பொழுது, அதைப் பற்றி இந்திய ஊடகங்கள் பேச மறந்தன! ஒழுங்கு முறை அமைப்புகள் கண்டும் காணாமல் காலம் தாழ்த்தின! உச்ச நீதி மன்றம் உப்பு சப்பில்லாத குழுவை அமைத்தது! அந்த குழுவும் வழா வழா அறிக்கையை அளித்தது எல்லாம் விஷ்வ குருவிற்கு "சாதகமாக" அமைந்து

விட்டதால் ஆற்றைக் கடந்து விடலாம் என்ற நப்பாசையில் இருந்தார் . ஆனால், இன்று இந்த கார்டியன் மற்றும் ஃபைனான்சியல் டைம்ஸ் பத்திரிக்கைகளில் வந்த செய்தியால் உலகத்தின் வாயை மூட முடியாது என்ற உண்மையை உணர்ந்திருப்பார்.

துறைமுகங்களையும், விமான தளங்களையும், சுரங்க உரிமைகளையும் "நண்பனின்" தயவால் இலகுவாக பெற்று வீங்கும் அதானி பிற நாடுகளிலும் சலுகைகள் பெற அதே நண்பனின் சிபாரிசும் தேவைப்படுவதை அன்று ஆஸ்திரேலியாவில் கண்டோம், இலங்கையில் கண்டோம், வங்க தேசத்திலும் கண்டோம், இரண்டு நாட்களுக்கு முன்பு கிறீஸ் நாட்டிற்கு மோடி சென்றதன் மூலம் காண்கிறோம். இதிலுள்ள வலைப் பின்னல்களை இந்திய ஊடகங்கள் மறைத்து விடலாம். இங்குள்ள சூழல் அனைவருக்கும் ஏதுவான சமமான ஆடுகளமாக இல்லாமல் மோடிக்கு நெருக்கமான அதானிக்கு சாதகமாக உள்ளதை – இந்திய அரசும் ஒழுங்குமுறை அமைப்புகளும் அதானிக்கு வெண்சாமரம் வீசுவதை – அகில உலக ஊடகங்கள் கவனித்துக் கொண்டு தான் உள்ளன என்பதற்கு இந்த வெளியீடு ஓர் உதாரணமாகும்.

இந்தியாவில் நிலவி வரும் மொக்கையான வணிகச் சூழலில், அரசு பாரபட்சமாக நடந்து கொள்வது என்ற நிலையை உலகம் கவனித்து கொண்டிருக்கிறது. ஹிட்டன்பர்க் அறிக்கையின்படி கிட்டதட்ட 37 பினாமி நிறுவனங்களை அதானி சகோதர கும்பல் நடத்துகிறது. இதில் 13 நிறுவனங்களின் நிதி இந்தியாவிற்குள் நுழைந்ததை பற்றி தான் செபி நிறுவனம் விசாரித்து வருகிறது. கடந்த வாரம் உச்ச நீதி மன்றத்தில் தாக்கல் செய்த அறிக்கையில் செபி, "தங்களால் விசாரணையை முழுமையாக நடத்த முடியவில்லை, ஏனெனில் அந்த 13 நிறுவனங்களும் மொரீஷியஸ் தீவுகளில், வெர்ஜின் ஐலண்ட தீவுகளில் பதிவு செய்துள்ள பலம் வாய்ந்த நிறுவனங்கள், அவர்கள் வலைப் பின்னலை பிரித்து உண்மை நிலை அறிய இன்னும் அவகாசம் வேண்டும்'' என செபி கூறியுள்ளது.

இந்த 13 நிறுவனங்கள் தவிர மேலும் 24 நிறுவனங்கள் மூலமாக பலாயிரங்கோடி பணம் இந்தியாவிலிருந்து வெளியேறி, மீண்டும் இந்தியாவிற்குள் நுழைந்துள்ளதை செபி கண்டு கொள்ளவில்லை, அவர்களும் இதில் உடந்தை என குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது. அதானி மீதான குற்றச்சாட்டை விசாரித்து, அதானிக்கு நற்சான்று பட்டம் வழங்கிய செபியின் முன்னாள் இயக்குனர் இன்று அதானி வாங்கியுள்ள என்.டி. டி வி. (NDTV) ல் இயக்குனராக பொறுப்பேற்றுள்ளார்.

இந்தச் சூழலில் இந்திய ஆட்சியாளர்கள் தாங்கள் ஒரு சார்புடையவர்கள் அல்ல, ஊழலை சகித்துக் கொள்பவர்கள் அல்ல என்று நாடகமாட வேண்டிய நிர்ப்பந்தத்தில் உள்ளனர் என காங்கிரஸ் தலைவர் ராகுல் காந்தி கூறியுள்ளார். உலக ஊடகங்கள் முன்னால் மோடி தன்னை உத்தமராக காட்டிக் கொள்ளவதை முறியடிக்க ஒரே வழி, நாடாளுமன்ற கூட்டுக் குழு விசாரணை நடவடிக்கையே என்றும் ராகுல் காந்தி குறிப்பிட்டுள்ளார்.

மணிப்பூர் பற்றி எரியும் பொழுது சபைக்கு வர அஞ்சிய மோடி- பண மதிப்பிழப்பின் போதோ அல்லது கொரோனா பரவிய போதோ விசேட நாடாளுமன்ற கூட்டத்தை கூட்டாத மோடி – இன்று விசேட ஐந்து நாள் கூட்டத்தை – கூட்டியுள்ளார்.

ஜி 20 மாநாடு நடக்கும் பொழுது 'மோடி புகழ்' பாட, இக் கூட்டத்தை மோடி அவசர அவசரமாக கூட்ட விழைந்துள்ளார் . இதற்கு முன்னால், நாடாளுமன்ற கூட்டுக் குழு விசாரணை நடைபெற வேண்டும் என்பது எதிர்கட்சிகள் மட்டுமல்ல, நடுநிலையாளர்களின் எண்ணமும் அதுதான்.

**ஆனால் அது நடக்குமா?**


**கட்டுரையாளர்; ச.அருணாசலம் ( செப்டம்பர் 7,** அறம் ஆன்லைன்)

**நேர்மை நெறியில் குறைந்த செலவில் விளம்பரம் செய்து பயன் பெருவீர்!**
**விளம்பரக்கட்டண விவரம்**
**முழுப்பக்கம் ரூ 2000/-; அரைப்பக்கம் ரூ 1000/-; கால் பக்கம் ரூ 500/-.**
**இதழில் வருகின்ற கட்டுரைகள், விளம்பரங்கள் படைப்பாளியையே சார்ந்தது**
**நேர்மை நெறி நிர்வாகிகளோ , ஆசிரியரோ பொறுப்பல்ல**

## கடன் தள்ளுபடி - கணக்கியல் ரீதியான தள்ளுபடி- இரண்டுக்கும் என்ன வித்தியாசம்? ஓர் அலசல்!

`` `கடன் தள்ளுபடி செய்யப்பட்ட நிறுவனங்களின்மீது சட்டரீதியான நடவடிக்கைகள் தொடரும்' என்று நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் கூறியிருக்கிறார். ஆனால், இவர்கள் வெளிநாடுகளுக்குத் தப்பிச்சென்றதே இவர்களின் ஆட்சிக்காலத்தில்தானே?''

வங்கிக்கடன் மோசடி செய்துள்ள விஜய் மல்லையா, மெகுல் சோக்ஷி உள்ளிட்ட 50 தொழிலதிபர்களின் ரூ.68,607 கோடி மதிப்பிலான வாராக்கடனைக் கணக்கியல் ரீதியாக ரிசர்வ் வங்கி தள்ளுபடி செய்துள்ளதாக வந்துள்ள தகவல், பரபரப்பாக விவாதிக்கப்பட்டுவருகிறது. குறிப்பாக, வாராக்கடன் தள்ளுபடிக்கும் **(waiver off),** கணக்கியல்ரீதியான தள்ளுபடிக்குமான **(write off)** வித்தியாசத்தைக் குறிப்பிட்டு ஒருவர்மீது ஒருவர் குற்றச்சாட்டுகளைக் கூறிவருகிறார்கள்.



கணக்கியல் ரீதியான தள்ளுபடி(vikatan)



வங்கி வாரியாக வாராக்கடன்(vikatan)

வங்கிக்கடனைத் தள்ளுபடி செய்வதை எப்படி முடிவெடுப்பார்கள், எதற்காக முடிவெடுப்பார்கள் என்பதை முதலில் பார்க்கலாம். வங்கிகளைப் பொறுத்தவரை, கொடுக்கப்படும் வங்கிக்கடன், வங்கிகளின் சொத்து. அதிலிருந்து கிடைக்கும் வட்டிதான் அவர்களின் வருமானம். தங்களின் கையிருப்பிலிருக்கும் தொகையை எந்த அளவுக்கு வங்கிக்கடனாகக் கொடுக்கிறார்களோ, அந்த அளவுக்கு அவர்களுக்கு வருமானம் கிடைக்கும். இந்த வருமானம் தொடர்ச்சியாகத் தங்குதடையின்றி கிடைக்கும்வரை எந்தச் சிக்கலும் இல்லை. வங்கிக்கடனுக்கான வட்டியைத் தொடர்ச்சியாக 3 மாத காலத்துக்குச் செலுத்தாமல் போனால் அதை வாராக்கடனாக அறிவித்துவிடுவார்கள். இந்தக் காலஅளவு, ஓர்

ஆண்டுக்காலத்தை எட்டும்போது சொத்து இழப்பாகக் கருதப்படும். இந்த ஓராண்டு காலத்துக்குள் அந்தச் சொத்தை மீட்பதற்கு பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்படும். எதுவும் பலனளிக்காதபோது சட்டரீதியான நடவடிக்கை எடுக்கப்படும். வழங்கப்பட்ட கடனைப்பொறுத்து நீதிமன்றத்திலோ, தேசிய நிறுவனச்சட்டத் தீர்ப்பாயத்திலோ **(NCLT),** கடன் மீட்பு தீர்ப்பாயத்திலோ **(DRT),** திவால் சட்டத்தின் மூலமோ, சர்பாஸி சட்டப்படியோ தீர்வு காண முயற்சியெடுக்கப்படும்.

இத்தகைய முயற்சிகளின் இறுதியில்தான் கடன் தள்ளுபடி குறித்து முடிவெடுக்கப்படுகிறது. சிறிய அளவிலான கடன்களில், முழுமையான கடன் தள்ளுபடி அல்லது குறிப்பிட்ட சதவிகிதம் அளவுக்குத் தள்ளுபடி என்று முடிவெடுக்கப்படுகிறது. வங்கிக்கடன் வாங்கியவரால் முதுமை காரணமாகக் கடனைத் திருப்பிச்செலுத்த முடியாதபட்சத்தில் அந்த வங்கியே முடிவெடுத்து, கடனைத் தள்ளுபடி செய்யக்கூடும். அதேபோல,வங்கிக்கடன் பெற்றவர், உடல்நலக்குறைவால் இயங்கமுடியாத சூழலில் இருந்தாலும், அவரால் தொடர்ந்து வருமானம் ஈட்டுவதற்கு வாய்ப்பில்லாததால் வங்கிக்கடன் தள்ளுபடி செய்யப்படலாம். வங்கிக்கடன் பெற்றவர் எங்கிருக்கிறார் என்றே தெரியாதபடி காணாமல்போய்விட்டாலும் வங்கிக்கடனை வசூலிக்கமுடியாத சூழலில் கடன் தள்ளுபடி செய்யப்படலாம். வாராக்கடன் தள்ளுபடியின்போது, வாராக்கடனை வசூலிப்பது தொடர்பான நடவடிக்கைகள் அனைத்துமே கைவிடப்படுவதுபோல கணக்கியல்ரீதியான தள்ளுபடியில் கைவிடப்படுவதில்லை

அடுத்தது, சட்டரீதியாகக் கிடைக்கக்கூடிய தள்ளுபடியாகும். அதில்தான் சட்டரீதியாக நீதிமன்றத்தில் உத்தரவு பெற்று நடவடிக்கை எடுப்பார்கள். அதில் எவ்வளவு தொகை வரைக்கும் வசூலிக்கலாம் என்பதை அந்த வழக்கை விசாரிக்கும் நீதி அமைப்பே கூறிவிடும். உதாரணமாக, தேசிய நிறுவனச்சட்டத் தீர்ப்பாயமானது, அலோக் இண்டஸ்ட்ரீஸ் நிறுவனம் 27,000 கோடி ரூபாய் வாராக்கடன் பிரச்னையில் சிக்கியபோது, ரிலையன்ஸ் இண்டஸ்ட்ரீஸ் நிறுவனத்துக்கு 5,000 கோடிக்கு செட்டில்மென்ட் செய்தது. அதன்பின் மற்ற கடன் அனைத்தும் தள்ளுபடியானது. சிறிய அளவிலான கடன்களில், ஒரு குறிப்பிட்ட வரம்புவரை வங்கிக்கிளை மேலாளர்கள் மட்டத்திலேயே தள்ளுபடி குறித்து முடிவெடுக்க முடியும். வரம்பு அதிகரிக்க அதிகரிக்க, முடிவெடுக்கும் அதிகார மட்டமும் மாறுபடும்.

**தள்ளுபடி/ கணக்கியல்ரீதியான தள்ளுபடி**

மிகப்பெரிய கார்ப்பரேட் நிறுவனக்கடன்களைப் பொறுத்தவரை, தள்ளுபடி, கணக்கியல்ரீதியான தள்ளுபடி என்ற இரண்டு முறைகளைப் பயன்படுத்துகிறார்கள்.

- நிறுவனங்களுக்கு வழங்கப்பட்ட வங்கிக்கடன்களைச் சரிவரத் திருப்பிச்செலுத்தாமல் வாராக்கடனாகும்போது. அந்த நிறுவனத்தின்மீது சட்டரீதியிலான நடவடிக்கைகள் எடுக்கப்படும். சொத்துகளை முடக்குதல், கையகப்படுத்துதல், விற்பனை செய்வதன்மூலம் பணத்தைத் திரட்டுதல் என முயற்சி எடுப்பார்கள். இந்த நடவடிக்கைகள் சட்டரீதியாகவும், நிதானமாகவும் நடக்கும். எதாவது தீர்ப்பின்மூலமாகவோ, செட்டில்மென்ட் மூலமாகவோ அல்லது சொத்துகளை விற்றோ கடனை அடைக்கும்பட்சத்தில் அந்த வாராக்கடன் பிரச்னை தீர்வுக்கு வரும். அதன்பின்னர், வங்கிகளின் புரவிசன் ஒதுக்கீட்டை வைத்து தள்ளுபடியான வாராக்கடன் கணக்கை நேர் செய்வார்கள்.
- வாராக்கடன் பிரச்னைக்கான நடவடிக்கைகள் தாமதப்படும் சூழலில் கணக்கியல்ரீதியான தள்ளுபடி என்ற முடிவு எடுக்கப்படுகிறது. இதன்படி, அந்த வாராக்கடன் கணக்கை சம்பந்தப்பட்ட வங்கிகள் முடித்துக்கொள்வார்கள். அந்த வாராக்கடனுக்காக ஒதுக்கப்பட்ட புரவிசனைக்கொண்டு அந்தக் கணக்கு நேர்செய்யப்படும். வாராக்கடன் பெற்றவரின் கணக்கில் பூஜ்ஜியமாக இருக்கக் கூடாது என்பதற்காக ஒரு ரூபாய் மட்டும் கணக்கில் வைக்கப்படும். ஆனால், வாராக்கடன் தள்ளுபடியின்போது, வாராக்கடனை வசூலிப்பது தொடர்பான நடவடிக்கைகள் அனைத்துமே கைவிடப்படுவதுபோல கணக்கியல்ரீதியான தள்ளுபடியில் கைவிடப்படுவதில்லை. சட்டரீதியாக எடுக்கப்படும் நடவடிக்கை ஒருபுறம் நடந்துகொண்டே இருக்கும். ஆனால் வங்கியைப் பொறுத்தவரை, அந்த வாராக்கடன் கணக்கை, வரவு செலவுக்கணக்கிலிருந்து நீக்கிவிடும். அதன்பின் எத்தனை ஆண்டுகள் வாராக்கடனை வசூலிப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டாலும், வட்டியை அதிகரிப்பதோ, புரவிசன் ஒதுக்குவதோ இருக்காது.

இதைத்தான் வங்கித்துறையில் அனுபவமிக்கவர்கள், `கணக்கியல் ரீதியான தள்ளுபடிக்குப்பின் வாராக்கடனை வசூலிப்பது சுலபமான காரியமல்ல' என்கிறார்கள். ஏனெனில் இத்தகைய தள்ளுபடி செய்யப்பட்ட வாராக்கடன்களில் பெரும்பாலானவை, `வில்ஃபுல் டீஃபால்ட்டர்' எனப்படும், தங்களிடம் பெரிய அளவிலான சொத்துகள் இருந்தும்கூட வேண்டுமென்றே கடனைச் செலுத்தாதவர்கள். இந்த வாராக்கடனைத் தராமல் இருப்பதற்காக சட்டத்தின் ஓட்டைகள் அனைத்தையும் பயன்படுத்தக்கூடியவர்கள். இவர்கள் வெளிநாட்டுக்குத் தப்பிச்செல்வது, இன்னொரு நாட்டில் குடியுரிமை வாங்குவது, அந்த நாட்டு நீதிமன்றத்தையே மண்டை காய வைப்பது, தாய் நாட்டுக்குத் திரும்ப மறுப்பது, அமலாக்கத்துறை, சி.பி.ஐ போன்ற அமைப்புகளுக்கே தண்ணி காட்டுவது என, அனைத்தையும் செய்யக்கூடியவர்கள். இவர்கள் ஒன்றும் விவசாயக்கடன் வாங்கியவர்களைப்போல அவமானப்பட்டுத் தலைகுனியக்கூடியவர்கள் அல்ல. பண பலத்தோடு, அதிகார மட்டத்தின் பலத்தையும் கொண்டு செயல்படக்கூடியவர்கள். இப்படியானவர்களின் வங்கிக்கணக்கை கணக்கியல் ரீதியாக தள்ளுபடி செய்தபின் அதுவரை எடுக்கப்பட்டுவந்த சட்டரீதியான நடவடிக்கை மேலும் தொய்வடையவே செய்யும். ஆட்சி மாற்றங்கள் போன்றவை நடக்கும்போது, காலப்போக்கில் கைவிடப்படவும் கூடும் என்றே கூறுகிறார்கள்.

ஒரு நிறுவனத்தின்மீது நடவடிக்கை எடுக்கும்போது, அந்த நிறுவனத்தின் இயக்குநர்களின்மீதும் தனிப்பட்ட நடவடிக்கை எடுக்கும்படியாகச் சட்டத்திருத்தம் கொண்டுவரக் கேட்டுக்கொண்டிருக்கிறோம்

ஒரு வங்கி வழங்கிய கடன், வாராக்கடனாக இருக்கும்போதுதான் அந்த வங்கியின் ரேட்டிங்கை அது பாதிக்கும். வாராக்கடனிலிருந்து நீக்கப்படும்போது வங்கி அந்த அழுத்தத்திலிருந்து விடுபடும். அப்படிப்பட்ட சூழலில் அந்த வாராக்கடனை வசூலிப்பதற்கான அழுத்தமும் குறையக்கூடும். எனவே, கணக்கியல்ரீதியான தள்ளுபடி வழங்கப்பட்டபின்பு அதுகுறித்து வங்கிகள் தீவிர கவனம் செலுத்தமாட்டார்கள். எனவே, இந்த வாராக்கடன் வசூலை `வரும்... ஆனா வராது!' எனலாம்.

வாராக்கடன் தொகை அதிகமாக இருப்பதில் பொதுத்துறை வங்கிகளே முன்னிலைவகிக்கின்றன. அதற்கு காரணம், பொதுத்துறை வங்கிகளில் கடன் பெறுவதில் நிறைய அதிகாரமட்டத்திலான குறுக்கீடுகள் இருக்கின்றன. முத்ரா வங்கிக்கடனிலிருந்து பெருநிறுவனக் கடன்கள்வரை தனியார் வங்கிகளைவிட பொதுத்துறை வங்கிகளில் எளிதில் வாங்க முடியும். வாங்கிய கடனைத் திருப்பிச் செலுத்தாமல் வாராக்கடனாக்கவும் முடியும். பொதுத்துறை வங்கிகளில் ஸ்டேட் பேங்க் ஆஃப் இந்தியா தான் வாராக்கடனில் முதலாவதாக உள்ளது. தனியார் வங்கிகளில் ஐ.சி.ஐ.சி.ஐ வங்கி முதலிடத்தில் உள்ளது.

கணக்கியல்ரீதியான தள்ளுபடி மூலம் தொழிலதிபர்களுக்கு பலன் உண்டா அல்லது வாராக்கடன் தொகையை முழுமையாக வசூலிக்க வாய்ப்புள்ளதா என்று அகில இந்திய வங்கி அதிகாரிகள் கூட்டமைப்பின் முன்னாள் பொதுச்செயலாளர் தாமஸ் ப்ராங்கோ கூறுகையில், ``கணக்கியல்ரீதியான தள்ளுபடி என்பது, அந்த வாராக்கடனை வசூலிப்பதற்கான வாய்ப்பு இன்னும் இருக்கிறது, அந்த நிறுவனத்துக்கென சொத்துகள் இருக்கின்றன என்ற நிலையில் வழங்கப்படுகிறது. ஆனால், இந்தச் சொத்துகளை விற்று கடனை அடைப்பதற்கு வெகுகாலம் ஆகலாம், சட்டரீதியான நடவடிக்கை இழுத்துக்கொண்டே செல்லலாம். எனவே, அந்த நிறுவனங்களுக்காக வங்கிக்கணக்கைத் தொடர்ந்தபடி, ஒவ்வோர் ஆண்டும் புரவிசன் ஒதுக்கீடு செய்வதற்குப் பதிலாக, வங்கிக்கணக்கிலிருந்து நீக்கிவிட்டு, சட்டரீதியான நடவடிக்கையை மட்டும் தொடர்வார்கள்.

அனுபவரீதியாகப் பார்க்கும்போது, கணக்கியல்ரீதியான தள்ளுபடிக்குப்பிறகு கடனை வசூலிப்பது மிகவும் அரிது. வசூல் செய்வதற்கான முயற்சியே குறைந்துவிடும். வாராக்கடன் தொகை நிலுவையாக இருக்கும் வரை தான் அதை வசூலிக்கும் எண்ணம் இருக்கும். இல்லாத பட்சத்தில் வசூலே தடைபட்டுவிடும். தற்போது `கடன் தள்ளுபடி செய்யப்பட்ட நிறுவனங்களின்மீது சட்டரீதியான நடவடிக்கைகள் தொடரும்' என்று நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் கூறியிருக்கிறார். ஆனால், இவர்கள் வெளிநாடுகளுக்குத் தப்பிச்சென்றதே இவர்களின் ஆட்சிக்காலத்தில்தானே?''

விஜய் மல்லையா, பா.ஜ.க ஆதரவோடு ராஜ்ய சபா உறுப்பினராக இருந்தவர். மெகுல் சோக்ஷியும், நிரவ் மோடியும் பிரதமருக்கு மிகவும் நெருக்கமாக இருந்தவர்கள். மெகுல் சோக்ஷி தப்பி ஓடுவதற்கும் போதுமான கால அவகாசம் கொடுத்தபின்னரே அவர்மீதான

நடவடிக்கையை எடுக்கத் தொடங்கினார்கள். இப்படியான வங்கி மோசடியாளர்கள், நம் நாட்டைவிட்டு வெளியேறுவது எளிதான விஷயம் அல்ல. அவர்கள் ஒன்றும் போலி பாஸ்போர்ட் மூலம் செல்லவில்லை. விமான நிலையத்திலேயே தடுத்து நிறுத்த நினைத்தால் நிறுத்தலாம். ஆனால், அதைச் செய்யவில்லை.

வங்கிகளைப் பொறுத்தவரை, சர்பாஸி சட்டத்தை மேலும் வலுவாக்க வேண்டுமென்று பல காலமாகக் கேட்டுக்கொண்டிருக்கிறோம். ஒரு நிறுவனத்தின்மீது நடவடிக்கை எடுக்கும்போது, அந்த நிறுவனத்தின் இயக்குநர்களின்மீதும் தனிப்பட்டு நடவடிக்கை எடுக்கும்படியாகச் சட்டத்திருத்தம் கொண்டுவரக் கேட்டுக்கொண்டிருக்கிறோம். அதைச் செய்வதற்கு அரசாங்கம் தயாராக இல்லை. தேசிய நிறுவனச்சட்டத் தீர்ப்பாயத்தைக் கொண்டுவரும்போதே, அதன் விதிமுறைகள், கடனைத் தள்ளுபடி செய்வதற்குத் தான் சாதகமாக இருக்கிறதே தவிர, கடன் தொகையை மீட்பதற்கு உதவியாக இல்லை என்று கூறியிருக்கிறோம். இதன் தீர்ப்புகளில் சராசரியாக 55% வரை தள்ளுபடியாகிறது. மொத்தமாகத் தள்ளுபடி செய்ததும் உண்டு.

நிறுவனங்களுக்கு கணக்கியல் ரீதியாக வாராக்கடன் தள்ளுபடி அறிவிக்கும் முன்பாக அந்த நிறுவனங்களின் சொத்துகளின்மூலம் கடன் தொகையைத் திரட்டுவதைத் தானே செய்திருக்க வேண்டும்? கடன் தள்ளுபடி செய்யப்பட்டுள்ள தொழிலதிபர்கள் யாராவது தற்போது வறுமையில் சிக்கியிருக்கிறார்களா என்றால் இல்லை. வெளிநாடுகளில் சொகுசான வாழ்க்கையைத்தான் வாழ்கிறார்கள். அதேவேளை, ஒரு விவசாயிக்கோ, வேறு ஏதேனும் சிறுதொழில் கடன் பெற்றவர்களுக்கோ இப்படியெல்லாம் தள்ளுபடி கிடைப்பதில்லை. நிலமுள்ள விவசாயிகள், வங்கிக்கடன் செலுத்துவதற்காக நிலத்தையே விற்று கூலி விவசாயியாக மாறுவதைப் பார்க்க முடிகிறது. பலர் அவமானத்துக்குப் பயந்து தற்கொலை செய்துகொள்கிறார்கள். ஆனால், கார்ப்பரேட் நிறுவனங்களுக்கு மட்டும் தப்பிச்செல்வதற்கு நம்முடைய சட்டத்திலிருக்கும் ஓட்டைகள் பயன்படுகின்றன" என்றார்.


விவசாயிகளுக்கான கடன்களைத் தள்ளுபடி செய்யும்போது அரசாங்கம் வெளிப்படையாகவும், பெருமையாகவும் அறிவிக்கிறது. அதேவேளை, தொழிலதிபர்களின் வாராக்கடன்களுக்கு தள்ளுபடி அறிவிக்கும்போது வெளிப்படைத்தன்மை இல்லாமல் நடந்துகொள்கிறது. தகவல் அறியும் சட்டத்தைப் பயன்படுத்தியதால்தான் இவ்வளவு பெரிய தள்ளுபடி நடவடிக்கையே தெரியவருகிறது. ஆனால், நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமனோ, இதில் எந்தத் தவறும் இல்லையென்றும், காங்கிரஸும் ராகுலும்தான் அரசியலாக்குகிறார்கள் என்று கூறியவர், 2009-2014 காங்கிரஸ் ஆட்சிக்காலத்தில் ரூ.1.4 லட்சம் கோடி அளவுக்கு தள்ளுபடி செய்துள்ளதாகவும் குற்றம்சாட்டியுள்ளார்.

வாராக்கடனை கணக்கியல்ரீதியாகத் தள்ளுபடி செய்வது, வங்கிகளின் செயல்பாட்டைப் பாதிக்குமா, இது பெரிய அளவில் வாராக்கடன் வைத்துள்ளவர்களை ஊக்கப்படுத்துவது போல ஆகாதா என்று பொருளாதார நிபுணர் ஷியாம் சேகரிடம் கேட்டோம். ``ரிசர்வ் வங்கியின் விதிமுறைகளின்படி, குறிப்பிட்ட காலத்துக்குமேல் வங்கி வாராக்கடனை அப்படியே வைத்திருக்க முடியாது. அப்படியான சூழலில் அந்த வாராக்கடனை அந்த வங்கியின் லாபத்தில் கழித்தாக வேண்டும். அதைத்தான் கணக்கியல்ரீதியான தள்ளுபடி என்கிறார்கள். வங்கிக்கு லாபமே இல்லையென்றாலும் கூட அதன் நஷ்டத்தில் இதையும் இணைத்துக்கொள்ள வேண்டும். இப்படித்தான் வங்கி இயங்க வேண்டும். எனவே, இதை வெறுமனே தள்ளுபடி என்று எடுத்துக்கொள்ளக் கூடாது. இது, வங்கிக்கடன் பெற்றவருக்காகச் செய்யப்படுவது கிடையாது. வங்கியின் டெபாசிட்டர்களுக்கு சொல்லப்பட வேண்டிய செய்தியாகும்.

ஆனால், இப்படி கணக்கியல்ரீதியாகத் தள்ளுபடி செய்யப்படுவதை மீட்டெடுக்க வேண்டிய பொறுப்பு வங்கிக்கு இருக்கிறது. எனவே, இதோடு இந்த நடைமுறை முடிந்துவிடவில்லை. கடனை வசூலிக்கும் நடவடிக்கைகள் தொடர்ந்தபடியே இருக்கும். உதாரணத்துக்கு, எஸ்ஸார் குழுமத்துக்குக் கொடுக்கப்பட்ட கடனில் பெரும்பகுதி இவ்விதம் தள்ளுபடியானது. ஆனால், அந்தத் தொகை முழுவதையும் எஸ்.பி.ஐ வங்கி வசூலித்தவுடன் அந்தத் தொகை, லாபத்தோடு சேர்க்கப்பட்டது. ஒருகாலத்தில் நஷ்டத்தோடு தள்ளுபடி செய்யப்பட்ட பணம், இன்னொரு காலத்தில் லாபத்தோடு சேர்க்கப்பட்டது. இதுதான் நடைமுறை. எனவே தற்போதும் அடமானங்களையெல்லாம் விற்று அந்த வங்கிக்கடனை நேர் செய்யும் நடவடிக்கை தொடரும். குறிப்பாக, விஜய் மல்லையாவின் வாராக்கடனைப்

பொறுத்தவரை, அவரது கடன் தொகையைவிட சொத்து மதிப்பு அதிகமாக உள்ளது. எனவே இந்தக் கணக்கியல்ரீதியான தள்ளுபடியில் பதற்றப்படும்படி எதுவுமே கிடையாது" என்றார்.

விஜய் மல்லையா, மெகுல் சோக்ஷி, நீரவ் மோடி ஆகியோர் எந்தவிதத்திலும் இந்தியாவுக்குப் பெருமை தேடித் தந்தவர்கள் இல்லை. தேர்தல் நெருங்கும்போது மட்டும் இவர்களைப் பிடிப்பதற்கான, இந்தியாவுக்கு அழைத்து வருவதற்கான ஏற்பாடுகள் நடப்பதாகக் காட்டப்பட்டது. தேர்தல் முடிந்த பின்பு அத்தனை செயல்பாடுகளும் மந்தமாகிவிட்டது. இவர்களைப்போன்றவர்கள், வாராக்கடன் மோசடியில் ஈடுபட்ட முன் அனுபவம் வங்கிகளுக்கு இருந்தாலும்கூட, தற்போதுவரை வாராக்கடன் அளவு குறைந்தபாடில்லை. 2015-ம் ஆண்டு 93,482.804 மில்லியன் அமெரிக்க டாலர்களாக இருந்த வாராக்கடன், தொடர்ந்து அதிகரித்து, 2018-ம் ஆண்டில் 1,33,519.787 மில்லியன் அமெரிக்க டாலர்களாக உள்ளது.




இந்திய வங்கிகளின் வாராக்கடன் (vikatan)



ஷியாம் சேகர்(vikatan)

இந்த ஏற்றப்போக்கைப் பார்க்கும்போது, வாங்கிய கடனைத் திருப்பிச் செலுத்தாமல் ஏய்ப்பவர்கள் அதிகரித்திருப்பார்களா என்றுதான் எண்ண வேண்டியுள்ளது. உலகமயமாக்கலுக்குப்பின் சாமானிய மக்களுக்குத் தரப்படும் வங்கிக்கடன்களின் அளவு குறைக்கப்பட்டு, பெருநிறுவனங்களுக்கு வழங்கும் கடன்களின் அளவு உயர்ந்துள்ளது. ஆனால், அவர்களுக்கு வழங்கப்படும் கடன்களில் உண்மைத் தன்மை இருக்கிறதா, பெருமளவு வாராக்கடன்களாக மாறுவதற்கு என்ன காரணம் என்பதையெல்லாம் சீர்தூக்கிப்பார்ப்பது அவசியம். அதேபோல வங்கித்துறை நிபுணர்கள் கேட்பதுபோல சர்பாஸி சட்டத்தையும் கடுமையாக்கி, வாராக்கடன் வைப்பவர்களைத் தப்பவிடாமல் தண்டனை பெற்றுத்தரும்படி செய்தால்தான், இந்தியாவின் பொருளாதார வளர்ச்சியில் ஓட்டை விழாமல் இருக்கும்.

**நன்றி: விகடன்(2018)**

---

## பொறியில் சிக்கிய ஊழல் மன்னன் பொன்முடி!

***-சாவித்திரி கண்ணன்***

August 11, 2023

அரசியல்வாதிகள் ஊழல் வழக்கில் தப்பித்து விடுவார்கள். அவர்களை தண்டிப்பது அரிதினும் அரிது என்பதை சுக்கு நூறாக்கும் விதத்தில் மாற்றங்கள்! எத்தனையோ ஊழல்கள்! எத்தனையோ வழக்குகள்! எல்லாம் வெறும் சலசலப்புடன் முடிந்தன! ஆனால், சொத்து குவிப்பு வழக்கில் தப்பிக் கொள்ள முயன்று வசமாக மாட்டிக் கொண்டார்! நான் பார்த்ததிலேயே மிக மோசமான முறையில் விசாரிக்கப்பட்ட வழக்கு இது தான் என பொன்முடி அவர் மனைவி விசாலாட்சி உள்ளிட்ட ஐவர் சொத்துகுவிப்பு ஊழல் தொடர்பான வழக்கில் இருந்து விடுவிக்கப்பட்ட தீர்ப்பு குறித்து, சென்னை உயர் நீதிமன்ற நீதிபதி என்.ஆனந்த் வெங்கடேஷ் தெரிவித்துள்ளார்.

இன்றைய உயர்நீதிமன்ற நீதிபதிகளில் ஆனந்த் வெங்கடேஷ் பக்திமான் என்றலும் முற்போக்கான பல தீர்ப்புகளை வழங்கியவர். பாதிக்கப்பட்ட எளிய மக்களின் வலியை கணக்கில் கொண்டு தீர்ப்புகளை வழங்கி வருபவர். ஆழ்ந்த புத்தக வாசிப்பும், திருக்குறள் மீது

பெருமதிப்பும் பொன்முடி எத்தனையோ பல ஊழல் வழக்குகளை கவலைப்படாமல் அடுத்தடுத்து சந்தித்து அதில் இருந்து அழகாக வெளிவந்துள்ளார்! ஆனால், இந்த வழக்கிலோ மாட்டிக் கொண்டார்.

**அரசு நிலத்தை அபகரித்தவர்:**

`1996 முதல் 2001 வரையிலான காலகட்டத்தில் பொன்முடி போக்குவரத்து துறை அமைச்சராக இருந்த போது சைதாப்பேட்டையில், ஸ்ரீநகர் வடக்கு காலனி பகுதியில் அரசுக்கு சொந்தமான இரண்டு ஏக்கர் நிலத்தை அபகரித்து தனது மாமியார் பெயரில் பங்களா கட்டினார். இது தொடர்பாக அடுத்து வந்த அதிமுக அட்சியில் அவர் மீது வழக்கு ஒன்று நடந்தது. இதுதொடர்பாக அமைச்சர் பொன்முடி, சார் பதிவாளர் புரு பாபு, பொன்முடியின் மாமியார் சரஸ்வதி, தற்போதைய சென்னை மாநகராட்சி துணை மேயர் மகேஷ்குமார், கென்னடி, சந்திரசேகரன், கண்ணப்பன், ஸ்ரீகாந்த், சைதை கிட்டு, ஜோதி ஆகிய 10 பேர் மீது தமிழக லஞ்ச ஒழிப்பு துறை போலீஸார் கடந்த 2003-ம்ஆண்டு வழக்கு பதிவு செய்தனர். இந்த வழக்கில் இருந்து தன்னை விடுவிக்கக் கோரி, எம்.பி., எம்எல்ஏக்கள் மீதான வழக்குகளை விசாரிக்கும் சிறப்பு நீதிமன்றத்தில் பொன்முடி மனு தாக்கல் செய்தார். இந்த மனுவை ஏற்றுக் கொண்ட சிறப்பு நீதிமன்றம், 2007-ல் வழக்கில் இருந்து பொன்முடியை விடுவித்து உத்தரவிட்டது. அப்போது திமுக ஆட்சியில் இருந்தது குறிப்பிடத்தக்கது. பிறகு, ஆட்சி மாறியவுடன் இதை எதிர்த்து லஞ்ச ஒழிப்பு துறை தாக்கல் செய்த மேல்முறையீட்டு மனுவை விசாரித்த சென்னை உயர் நீதிமன்றம், பொன்முடியை விடுவித்து சிறப்பு நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவை கடந்த 2017-ல் ரத்து செய்தது. இதையடுத்து, இந்த வழக்கு விசாரணை சென்னை எம்.பி., எம்எல்ஏக்கள் மீதான வழக்குகளை விசாரிக்கும் சிறப்பு நீதிமன்றத்தில் நடைபெற்றது.






பாலிடெக்குனிக்குகள்! பொன்முடி மகன் கௌதமசிகாமணி

இந்த வழக்கில் அமைச்சர் பொன்முடி உள்ளிட்ட 7 பேருக்கு எதிராக, ஓய்வுபெற்ற ஐஏஎஸ் அதிகாரி ராஜரத்தினம் உட்பட 90-க்கும் மேற்பட்டோர் சாட்சியம் அளித்தனர். நூற்றுக்கும் மேற்பட்ட சான்று ஆவணங்கள் தாக்கல் செய்யப்பட்டன. இந்த வழக்கில் நீதிபதி ஜி.ஜெயவேல் இந்த ஆண்டு ஜுலை 7 ஆம் தேதி தீர்ப்பு வழங்கினார். ‘‘இந்த வழக்கில் அமைச்சர் பொன்முடி, துணை மேயர் மகேஷ்குமார் உள்ளிட்ட 7 பேர் மீதான குற்றச்சாட்டுகளும் அரசுத் தரப்பில் சரிவர நிரூபிக்கப்படவில்லை’’ என்று கூறி, 7 பேரையும் வழக்கில் இருந்து விடுவித்தார்.

இதே போல விடுவிக்கப்பட்ட ஒரு வழக்கில் தான் தற்போது மீண்டும் மாட்டி உள்ளார்! வருமானத்திற்கு அதிகமாக ஒரு கோடியே 36 லட்சம் சேர்த்ததாக லஞ்ச ஒழிப்புத்துறை சட்டத்தின் 109 பிரிவின் கீழ் பொன்முடி, அவரது மனைவி விசாலாட்சி, அவரது மாமியார் பி சரஸ்வதி, பொன்முடியின் நண்பர்கள் மணிவண்ணன், நந்தகோபால் ஆகியோர் மீது 2002-ல் வழக்கு பதிவு செய்யப்பட்டது. இந்த வழக்கில் 228 பேரின் சாட்சியங்கள் பதிவு செய்யப்பட்டு, 318 ஆவணங்கள் சமர்ப்பிக்கப்பட்டன.

சுமார் இருபது ஆண்டுகளுக்கும் மேலாக விழுப்புரம் நீதிமன்றத்தில் நடந்த வழக்கின் விசாரணை முழுமையடைந்து கிட்டதட்ட தீர்ப்பு தரும் தருவாயில் அதிரடியாக வேலூர் நீதிமன்றத்துக்கு மாற்றப்பட்டது. தற்போது அதிகாரத்தில் உள்ள அமைச்சர் தொடர்பான இந்த வழக்கு கடைசி நேரத்தில் இப்படி மாற்றப்பட்டதுக்கு பின்பற்றிய நடைமுறைகள் பொதுவாக அனைத்து தரப்பிலும் சந்தேகிக்கப்பட்ட நிலையில், தற்போது சென்னை உயர் நீதிமன்ற நீதிபதி என்.ஆனந்த் வெங்கடேஷ் தாமாக முன் வந்து இந்த வழக்கை மீண்டும் விசாரணைக்கு எடுத்துள்ளார்.

**சமரசமற்ற நீதிபதி;**

அதுமட்டுமின்றி, இந்த தீர்ப்பை எதிர்த்து தமிழக லஞ்ச ஒழிப்புத் துறை உயர் நீதிமன்றத்தில் மேல் முறையீடும் செய்யவில்லை... என்பதால் லஞ்ச ஒழிப்புதுறையை ஆட்சியாளர்கள் கட்டுப் படுத்துகிறார்கள் என்பதும் தெரிய வந்தது. இந்த சூழலில் எம்பி,எம்.எல்.ஏக்கள் தொடர்பான ஊழல்களை விசாரிக்கும் பிரிவின் நீதிபதி ஆனந்த் வெங்கடேஷ் இந்த வழக்கை தானே வலிந்து எடுத்து விசாரிப்பதற்கான காரணத்தை விளக்கி 17 பக்க அறிக்கை தமிழக லஞ்ச ஒழிப்பு துறைக்கு தெரியப்படுத்தி உள்ளார்.



**பொன்முடி குடும்ப கல்வி நிறுவனம்**



**பொன்முடிகுடும்பத்தின் பொறியியல் கல்லூரி**

அதில் விழுப்புரம் மாவட்டத்தில் பெரும்பகுதி வழக்கு விசாரிக்கப்பட்டு முடியும் தருவாயில் வேலூருக்கு மாற்ற வேண்டிய அவசியம் என்ன? இரு நீதிபதிகளைக் கொண்ட நிர்வாகக் குழு இந்த மாற்றத்தை நிகழ்த்தி உள்ளது. நிர்வாக ரீதியில் கீழமை நீதிமன்ற அலுவல்களில் தலையிட உயர்நீதிமன்ற நீதிபதிகளுக்கு அதிகாரம் எதையும் சட்டம் வழங்கவில்லை. எனவே, அவ்வாறு செய்யும் அதிகாரம் அவர்களுக்கு இல்லை.

இந்த வழக்கின் இறுதி வாதங்கள் எழுத்து வடிவில் ஜூன் 23ம் தேதி வேலூர் நீதிமன்றத்தில் சமர்பிக்கப்பட்டுள்ளது. அடுத்த நான்கே நாட்களில் 172 சாட்சிகளின் பதிவை பரிசீலித்ததோடு, 381 ஆவணங்களை சரிபார்த்து 28ம் தேதி , 228 பக்க தீர்ப்பை நீதிபதி வழங்கியுள்ளார். அரசியல் சாதன நீதிமன்றங்களில் இருப்பவர்கள் கூட இத்தகு சாதனையை நிகழ்த்த கனவு மட்டுமே காண முடியும். இந்த தீர்ப்புக்கு பின் ஜூன் 30 ம் தேதி நீதிபதி ஓய்வு பெற்றுள்ளார். வேலூர் நீதிமன்ற வழக்கின் விசாரணை கோப்புகளை ஆய்வு செய்த போது என் சந்தேகங்கள் சரி என்பது தெரியவருகிறது" என்று தன் உத்தரவில் நீதிபதி ஆனந்த் வெங்கடேஷ் தெரிவித்துள்ளார். எத்தனையோ ஊழல்களில் இருந்து தொடர்ந்து தப்பித்தவர் பொன்முடி! அதை பட்டியலிட்டால் பக்கங்கள் போதாது! ஆனால், ஆட்சி அதிகாரத்தில் இருப்பதால், நீதி பரிபாலனத்தையே கேள்விக்கு உள்ளாக்கும் வகையில், நீதித் துறைக்குள்ளேயே கறுப்பு ஆடுகளை உருவாக்கி, தப்பிய நிலையில் மீண்டும் பிடிபட்டுள்ளார்.

**அன்றே தகுதி இழந்திருப்பார்;**

இதே போல மற்றொரு வழக்கிலும் அதிரடி ரணகளம் செய்து பொன்முடி தப்பித்து உள்ளார் என்பதும் கவனத்திற்கு உரியது. 2006 முதல் 2011 வரையிலான கால கட்டத்தில், திமுகவின் உயர்கல்வித்துறை அமைச்சராக தமிழகத்தில் பொறுப்பு வகித்த பொன்முடி மீது 2011ஆம் ஆண்டு ஊழல் வழக்கு விழுப்புரம் மாவட்ட லஞ்ச ஒழிப்பு துணை காவல்துறை கண்காணிப்பாளர் கன்னியப்பன், பொன்முடி வருமானத்துக்கு அதிகமாக சொத்துக்களை குவித்துள்ளதாக குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்திருந்தார். இவ்வழக்கு தலைமை குற்றவியல் நீதிமன்றத்தில் நடைபெற்றது. பின்னர் விழுப்புரம் ஊழல் தடுப்புப் பிரிவு சிறப்பு நீதிமன்றத்திற்கு மாற்றப்பட்டது. இவ் வழக்கில் 50 பக்க குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்டது. ஆந்திரமாநில பத்திரப்பதிவு பதிவாளர், வங்கி அலுவலர்கள் உள்ளிட்ட 37 சாட்சியங்கள் விசாரிக்கப்பட்டனர். அரசு தரப்பு வழக்கறிஞர் சண்முக வேலாயுதம் போதுமான ஆதாரங்களை எடுத்து வைக்காமல் சற்றே ஜகா வாங்கியபடி இருந்தார்.

ஐந்தாண்டு விசாரணை முடிவில் அடுத்த தேர்தல் நெருங்கும் சமயம் இது தொடர்பான வழக்கில் விழுப்புரம் லஞ்ச ஊழல் தடுப்பு சிறப்பு நீதிமன்ற நீதிபதி சுந்தரமூர்த்தி ஏப்ரல் 18-2016 பிறப்பித்துள்ள உத்தரவில், ''குற்றச்சாட்டுகளை உறுதி செய்யத் தேவையான ஆதாரங்கள் இல்லை'' என்று தெரிவித்து, பொன்முடி மற்றும் அவரது மனைவி விசாலாட்சி இருவரையும் விடுவித்தார். இதில் தண்டனை வழங்கப்பட்டிருந்தால், அவர் தேர்தலில் நிற்கும் தகுதியை அன்றே இழந்திருப்பார்.

2006 முதல் 2011 வரையிலான காலக்கட்டத்தில் நடந்த திமுக ஆட்சியில், தமிழக அமைச்சரவையில், தற்போதைய உயர் கல்வித் துறை அமைச்சரான பொன்முடி கனிம வளங்கள் மற்றும் சுரங்கத்துறை அமைச்சராக இருந்தார். அந்த அதிகாரத்தில் தன் மகனுக்கு செம்மண் குவாரியில் மணல் அள்ள அளிக்கப்பட்டஅனுமதியை அதிரடியாக வழங்கினார். அந்த அனுமதியை துஷ்பிரயோகம் செய்து அவரது மகன் அனுமதிக்கப்பட்ட அளவையும் மீறி,

2 லட்சத்து 64 ஆயிரத்து 644 லோடு லாரி செம்மண் எடுத்ததன் மூலம், அரசுக்கு 28 கோடியே 36 லட்சத்து 40 ஆயிரத்து 600 ரூபாய் இழப்பு ஏற்படுத்தியுள்ளதாக மற்றொரு வழக்கு நடந்து வருகிறது.

"இதெல்லாம் சர்வ சாதரணம்! விழுப்புரம், கள்ளக்குறிச்சி மாவட்டங்களில் எண்ண முடியாத அளவுக்கு எக்கச்சக்க சொத்துக்களை அமைச்சர் பொன்முடி வாங்கி குவித்துள்ளார்" என உடன்பிறப்புகளே சொல்கிறார்கள்! வெளி நாட்டில் பல கோடிகள் முதலீடு செய்துள்ள விவகாரம் அமலாக்கத் துறை கைதில் வெளியானது. அதிலும்விடுவிக்கப்பட்டார்.

சூர்யா கல்வி குழுமம் என்ற பெயரில் பொறியியல் கல்லூரிகள், கலை அறிவியல் கல்லூரிகள், பாலி டெக்குனிக்குகள் என பகாசூரக் கல்வி வியாபாரத்தில் இருக்கும் ஒரு அமைச்சரே கல்வித் துறைக்கு அமைச்சராக இருப்பது தமிழ்நாட்டில் மட்டுமே பார்க்க முடிந்த ஒரு விநோதமாகும். சென்ற பதவி காலத்திலேயே துணைவேந்தர் பதவி தொடங்கி பேராசிரியர்கள் பணியிடம் வரை அனைத்துக்கும் லஞ்சம் வாங்குவதில் பேர் போன பொன்முடிக்கே மீண்டும் அதே உயர் கல்வித்துறையை முதல்வர் ஸ்டாலின் தந்திருக்கக் கூடாது. இது போன்ற ஊழல் பெருச்சாளிகளை கூட வைத்துக் கொண்டு பாஜகவை எப்படி திமுகாவால் எதிர்க்க முடியும்?

பல ஊழல்கள்! பல ஆண்டுகள்! பல்லாயிரம் கோடிகள்! ஆனால், வெறும் 1.36 கோடிகளில் மாட்டிக் கொண்டார்! பல நாள் திருடன், ஒரு நாள் அகப்பட்டே தீர வேண்டும்.

---

## <u>இயக்கத்தில் புதிதாக இணைந்தவர்களை வாழ்த்தி வரவேற்கிறோம்</u>

## 2023-24இல் <u>இணைந்தவர்களின் ஆண்டு உறுப்பினர்கள் பெயர் மற்றும் முகவரி</u>

| | | |
|---|---|---|
| **ரா.முத்து**<br>HIG-II 213,**தமிழ் பல்கலைக் கழக வளாகம்**<br>**மருத்துவ கல்லூரி சாலை**,<br>**சிந்தாமணீ**,<br>**தஞ்சாவூர்**=613010 | **ம.ஆர்த்தி**<br>**54-1,கீழத்தெரு**<br>**அக்கரைவட்டம் po**<br>**ஒரத்தநாடு**<br>**தஞ்சாவூர்-614614**<br>**தொ.எண்:8754814117** | **D.அமுதா**<br>**89,வைரம் நகர் 3வது தெரு**<br>**மாதாகோட்டை ரோடு**<br>**தஞ்சாவூர்-613005**<br>**தொ.எண்:9443866521** |
| **ந.குணசேகரன்**<br>18a,**அண்ணாநகர் முதல் தெரு**<br>**தஞ்சாவூர்**-<br>**தொ.எண்**:6380360797 | **இர..ஹரிஹரன்**<br>**18எ,அண்ணாநகர் முதல் தெரு**<br>**ஈஸ்வரி நகர்**<br>**எம்.சி.ரோடு,**<br>**தஞ்சாவூர்-613004**<br>**தொ.எண்:9445233622** | **39B , காளியம்மன் கொவில் தெரு**<br>**ஜகன்னாதபுரம்**<br>**அரியமங்கலம்**<br>**திருச்சி-10**<br>**தொ.எண்: 9788785411** |
| **இரா.மணிமேகலை**<br>18a,**அண்ணாநகர் முதல் தெரு**<br>**தஞ்சாவூர்**-<br>**தொ.எண்**:6380360797 | **P.செல்வராஜ்**<br>**06.09.1957**<br>**89,வைரம் நகர் 3வது தெரு**<br>**மாதாகோட்டை ரோடு**<br>**தஞ்சாவூர்-613005**<br>**தொ.எண்:8525820864** | **P. கிருஷ்ணன்**<br>**39B , காளியம்மன் கொவில் தெரு**<br>**ஜகன்னாதபுரம்**<br>**அரியமங்கலம்**<br>**திருச்சி-10**<br>**தொ.எண்: 942197781** |
| | **<u>ஆயுள் உறுப்பினர்கள்</u>** | |
| **ரெ.பாஸ்கர்**<br>54-1,**கீழதெரு**<br>**அக்கரைவட்டம்** po<br>**ஒரத்தநாடு**<br>**தஞ்சாவூர்**-614614<br>**தொ.எண்**:9751733969<br><br>**<u>மாணவ உறுப்பினர்</u>**<br>**செல்வி S ஜனனி** | **S.தட்சிணாமூர்த்தி**<br>**12.06.1960**<br>**\1-38/28,வேதாத்திரி நகர் முதல் தெரு**<br>**பசுபதி கோயில்**<br>**தஞ்சாவூர்-614206**<br>**தொ.எண்:9442714867** | **K.சுப்ரமனியன்**<br>**எண்:845, முதல் மெயின் ரோடு**<br>**நியூ திப்பசந்திரா**<br>**( New THIPPASANDRA)**<br>**பெங்களூரு-560075** |

# குவிந்துள்ள மணல்!கொள்ளை போகும் தண்ணீர்!

***-சாவித்திரி கண்ணன்***

September 1, 2023

*தமிழகத்தில் வருடா வருடம் காவிரியை நம்பி விவசாயிகள் கண்ணீர் சிந்துவதும், கர்நாடக அரசியல் கட்சிகளோ மக்களின் உணர்ச்சியைத் தூண்டி, தண்ணீரை தராமல் அரசியல் செய்வதும் வாடிக்கையாக உள்ளது. செலவின்றி தண்ணீர் தேவையை நிறைவேற்ற சிறப்பாக வழி காட்டுகிறார், மூத்த பொறியாளர் அ.வீரப்பன்.*

தற்போதைய நிலையில் தமிழகத்தில் இரண்டு லட்சம் நெற்பயிர்கள் கர்நாடகத்தின் காவிரி மறுப்பால் கருகிய வண்ணம் உள்ளன. 15 லட்சம் சம்பா சாகுபடி நெற்பயிர்கள் சாகுபடியாகுமா? அல்லது சாகும்படியாகுமா? எனக் கேள்விக் குறியாகியுள்ளது.

இதற்கிடையே தமிழக அரசு காவிரி நீரைத் தேக்கும் தமிழகத்தின் பிரிட்டிஷ் காலத்து பேரணையான மேட்டூர் அணைத் தேக்கத்தில் குவிந்துள்ள வண்டல் மண்ணை அகற்ற ரூ 3,000 கோடி செலவு செய்யப் போவதாக அறிவித்துள்ளது. பிரிட்டிஷ்காரர்கள் அன்றைக்கு இந்த அணையை கட்ட செலவழித்த தொகை 4 கோடியே 80 லட்சம். இந்த அணையால் 12 மாவட்டங்களில் விவசாயம் நடக்கிறது. இதன் நீளம் 5,300 அடிகளாகும். நீர் தேக்க பகுதி 59.25 சதுர மைல்களாகும்.மொத்த கொள்ளளவு 93.5 டி.எம்.சியாகும். அணையில் 120 அடி வரை நீரை தேக்கும் வகையில் இது கட்டப்பட்டது.

ஆனால், மேட்டூர் அணையின் மொத்த கொள்ளவில் சுமார் 40 சதவிகிதமான அளவுக்கு வண்டல் மண் தேங்கியுள்ள காரணத்தால், அணையை முழுமையாக பயன்படுத்த முடியாமல் உள்ளோம். "ஒரு மெகா தூர் எடுப்பு என்பது மிக அவசியமே! ஆனால், அதற்காக ரூ 3,000 கோடிகளை செலவிடுவது தேவையற்றது" என்கிறார் **மூத்த பொறியாளர் அ.வீரப்பன்.**






இந்தச் சூழலுக்கு நிரந்தரத் தீர்வாக ஒரு அருமையான செலவு குறைந்த திட்டத்தை தமிழ்நாடு ஓய்வுபெற்ற பொறியாளர் சங்கத் தலைவர் **அ.வீரப்பன்** தெரிவிக்கிறார். அதன் சாராம்சம் வருமாறு;

தமிழ் நாட்டின் மிக முக்கிய நீராதாரமான மேட்டூர் அணையில் பல வருடங்களாக வந்து சேர்ந்துள்ள வண்டல் மண் என்பது தமிழகத்திற்கு கிடைத்துள்ள ஒரு பொருளாதார பொக்கிஷமாகும். மேட்டூர் அணையில் மட்டுமின்றி இது போன்ற முக்கிய நீராதரங்களில் சேர்ந்துள்ள மணல் அனைத்துமே தமிழகத்தின் கட்டுமான தொழிற்துறைக்கும், நெடுஞ்சாலைத் துறைக்கும் ஒரு வரப்பிரசாதமாகும்.

மேட்டூர் அணையில் தூர் வாரினாலே நம்மால் மேலும் 30 டிம்.சி தண்ணீர் சேமிக்க முடியும். அது போல மணி முத்தாறு, வைகை,சாத்தனூர், வீராணம், கிருஷ்ணகிரி, பவானிசாகர், திருமூர்த்தி, மேலணை... ஆகியவற்றையும் தூர் வாரினால் தமிழகத்தால் மேலும் 20 டி.எம்.சி என 50 டி.எம்.சி தண்ணீர் சேகரிக்க முடியும். இது தமிழக விவசாய பாசனத்திற்கும், மக்களின் குடி நீர் தேவைக்கும் மிக உதவிகரமாக இருக்கும்.

இதற்கான செலவை சமாளிக்க இந்த மணல் தேவைப்படும் கட்டுமானத் துறை மற்றும் நெடுஞ்சாலைத் துறைக்கு மணலை பயன்படுத்தும் பிரம்மாண்ட நிறுவனங்களை அழைத்து எடுத்துக் கொள்ளச் செய்யலாம். இந்த மணல் தமிழகத்தின் கட்டுமானத் தொழிற்துறைக்கு

குறைந்தது மூன்றாண்டு தேவைக்கு பயன்படக் கூடியதாக இருக்கும். இதனால், தூர்வாரும் நிறுவனமே எடுக்கும் மணலுக்கு ஒரு தொகை தருவார்கள். அரசுக்கு செலவு மிச்சமாவதோடு வருவாயும் கிடைக்கும். அரசு அதிகபட்சம் எங்கேங்க எவ்வளவு தூர் வாற வேண்டும் என்ற திட்டமிடலுக்கும், மேற்பார்வைக்கும் சுமார் 100 கோடி செலவழித்தால் போதுமானது.

**. தமிழ்நாட்டு ஆறுகளிலிருந்து கடலில் கலக்கும் வெள்ள நீரளவு (4 ஆண்டுகளுக்கு ஒரு முறை)**

| வ. எண். | படுகையின் பெயர் | பெய்யும் சராசரி மழை அளவு மி.மீ. | படுகையின் பரப்பு ச.கி.மீட்டர் | கணக்கீட்டின்படி கிடைக்கும் நீர் ஆ.மி.க.அடி | உபரியாகும் நீர் ஆ.மீ.க.அடி (டிஎம்சி) |
|---|---|---|---|---|---|
| 1. | சென்னை கொசத்தலையாறு | 1215 | 5524 | 31.4 | 6.4 |
| 2. | பாலாறு | 1165 | 10656 | 76.8 | 24.4 |
| 3. | வராக நதி | 1137 | 3619 | 10. | 6.1 |
| 4. | பொன்னியாறு | 857 | 12133 | 57.9 | 26.4 |
| 5. | பரவனாறு | - | - | - | 12.10 |
| 6. | வெள்ளாறு | 842 | 8540 | 59.1 | 41.20 |
| 7. | காவிரி | 1000 | 44016 | 249.5 | 103.56 |
| 8. | அக்னியாறு | 911 | 1875 | 7.9 | 1.80 |
| 9. | வைகை | 827 | 7031 | 44.9 | 7.00 |
| 10. | குண்டாறு | 812 | 3510 | 12.1 | 1.80 |
| 11. | வைப்பாறு | 905 | 3100 | 110 | 5.00 |
| 12. | தாமிரபரணி | 889 | 5969 | 60.3 | 24.00 |
| | | | | ஆக மொத்தம் | 259.76 |

மழை அதிகமாகப் பெய்யும் பொழுது நமது நீர் தேக்கங்களால் தண்ணீரை தேக்க முடியாமல் அதிக நீரை விரயமாக்குகிறோம். இப்படி வீணாக்கப்பட்டு கடலில் சேரும் தண்ணீரை மிச்சப்படுத்தினாலே, நமது கணிசமான தேவைகளை பூர்த்தி செய்யலாம். இந்த தூர்வாறல் முறையாக செய்யப்பட்டால், கடல் நீரை குடி நீராக்க வேண்டிய அவசியமோ, செலவோ இருக்காது. உண்மையில் நம் தமிழ்நாடு தண்ணீரில் தன்னிறைவு பெற்ற நாடாகும்" என்கிறார் மூத்த பொறியாளர் அ.வீரப்பன்

---

## திருப்பத்தூர் ஊழல் எதிர்ப்பு இயக்கம்





**நமது திருப்பத்தூர் ஊழல் எதிர்ப்பு இயக்கம் 77வது சுதந்திர நாளை (15-08-2023) திருப்பத்தூர் அரசினர் பூங்காநிதியுதவி உயர்நிலைப் பள்ளியோடு இணைந்து கொண்டாடியது.**

**திருப்பத்தூர் இயக்கத் தலைவர் நல்லாசிரியர் திரு சண்முகம் மற்றும் செயலாளர் திரு இதய குமாரும் நமது இயக்கத்தைப் பற்றியும் சுதந்திரப் போராட்ட வீரர்களைப் பற்றியும் உரையாற்றினர்.**

# செய்தித் தாள்களில் ஊழல் செய்திகள்


சினிமா பாணியில் நடந்த ருசிகரம்:

## சட்டையில் தனி பாக்கெட்டுகள் அமைத்து ரூ.24¾ லட்சம் கடத்திய முதியவர் கைது

கால் தொடையிலும் பணத்தை கட்டிச் சென்றது கண்டுபிடிப்பு


திருவெறும்பூரில் பரபரப்பு:

## சார்பதிவாளர் அலுவலகத்தில் லஞ்ச ஒழிப்பு போலீசார் சோதனை

## ரூ.47 ஆயிரத்தை கைப்பற்றி ஊழியர்களிடம் விசாரணை

பொன்மலைப்பட்டி, ஆக.22-

திருவெறும்பூர் சார்பதிவாளர் அலுவலகத்தில் லஞ்சஒழிப்புபோலீசார் சோதனை நடத்தி, ரூ.47 ஆயிரத்தை கைப்பற்றி விசாரணை நடத்தி வருகின்றனர்.

**அதிரடி சோதனை**

திருச்சியை அடுத்ததிருவெறும்பூர் அருகே உள்ள வின் நகரில் சார் பதிவர்ளர் அலுவலகம் செயல்பட்டு வருகிறது. இந்த அலுவலகத்தில் ரூ.1 லட்சம் கைமாறப்போவதாக லஞ்ச ஒழிப்புத்துறை போலீசாருக்கு தகவல் கிடைத்துள்ளது. அதன் அடிப்படையில் நேற்று மாலை திருவெறும்பூர் சார் பதிவாளர் அலுவலகத்தில் லஞ்ச ஒழிப்பு துறை துணை சூப்பிரண்டு மணிகண்டன் தலைமையில் இன்ஸ்பெக்டர் பிரசன்னா வெங்கடேசன் மற்றும் லஞ்ச ஒழிப்பு பிரிவு போலீசார் அதிரடியாக நுழைந்து சோதனை நடத்தினர்.

அப்போது அலுவலகத்தின் உள்ளே இருந்த ஊழியர்கள் கணக்கில் வராத ரூ.47 ஆயிரத்தை ஜன்னல் வழியாக வெளியே தூக்கி வீசியதாக கூறப்படுகிறது. இதையடுத்து போலீசார் அந்த பணத்தை கைப்பற்றினர்.

**விசாரணை**

மேலும் இது தொடர்பாக அலுவலகத்தில் இருந்த பதிவாளர்(பொறுப்பு) இந்துகுமார் உள்பட ஊழியர்களிடம் போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர். இந்த சம்பவம் அப்பகுதியில் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.


Maalai Malar Madurai 30-8-2023 3

திண்டுக்கல் அருகே

## வாரிசு சான்றுக்கு லஞ்சம் வாங்கிய வி.ஏ.ஓ கைது

உதவியாளரும் சிக்கினார்


THE TIMES OF INDIA, AHMEDABAD
TUESDAY, JUNE 20, 2023

## 'Insurance firm can't decide on medical expenses limit'

### Company Directed To Pay ₹1.64L For Cataract Surgery

Tushar.Tere@timesgroup.com

**Vadodara:** In an important verdict, a consumer forum in Vadodara recently ruled that insurance firms can't decide which expense isn't necessary for medical treatment and how much maximum amount can be paid for it. The observation was made while ordering an insurance firm to pay the full medical bill of Rs 1.64 lakh to complainant Mayur Parmar for cataract surgery.

Parmar, 61, had undergone cataract surgery for both eyes in December 2022 and January this year and spent Rs 1.64 lakh on the treatment. He claimed insurance money from Oriental Insurance Company Ltd for the same. But the insurance firm partially approved his claim and agreed to pay Rs 49,000. The complainant said that the insurer refused to pay the full amount on the grounds that the expense of the cataract surgery wasn't customary and reasonable.


In February this year, Parmar filed a case against Oriental Insurance Company Ltd in the Vadodara District Consumer Disputes Redressal Commission (additional) and demanded reimbursement of full medical expenses. He said in his complaint that the insurer wrongly interpreted the policy's terms and partially rejected his claim.

After hearing both sides, the consumer forum observed that the policy doesn't mention what exactly reasonable and customary charge means and how the company has interpreted it. "The medical treatment fee varies in every hospital and as per the doctor. The fee of an expert doctor is usually high. The insurance firm can't decide which expense wasn't necessary during the treatment," the forum observed.

Also, the insurer can't decide how much charge (medical expenses) the complainant is entitled to get," the forum said and added that the insurance firm can't decide on the customary charge too. "Reasonable charge means the expenses done for the necessary treatment and hence it is not an excessive expense. The insurance firm cannot decide on how much and what kind of expense the doctor can do during treatment," the forum observed.

"Cataract surgery is a common surgery but the medical expense depends on which doctor does the surgery and what kind of lens are used. Terming the partial claim rejection unreasonable, the forum ordered the insurer to pay Parmar the remaining Rs 1.15 lakh with 9% interest within two months from the date of the order.

The insurer has also been ordered to pay Rs 5,000 each towards mental harassment and the legal cost.


will lift-off from Sriharikota on Saturday at 11.50 am | P7

development would be the focus rather than populist schemes being announced just for the sake of winning elections. P7

## HC declares Deve Gowda's grandson Prajwal's election null over corruption

EXPRESS NEWS SERVICE
@ Bengaluru

IN a major setback to Janata Dal (Secular), the Karnataka High Court on Friday declared the election of former prime minister and JD(S) supremo H D Deve Gowda's grandson Prajwal Revanna as Member of Parliament from Hassan Lok Sabha constituency as null and void for indulging in corrupt practices during the Lok Sabha elections of 2019.

The court also directed naming Prajwal's father, senior JD(S) leader and MLA H D Revanna, and brother MLC Suraj Revanna for being involved in corrupt practice to help Prajwal and issue show cause notice to them as to why they should not be tried.

It also noted the involvement of then chief minister and senior JD(S) leader H D Kumaraswamy, Prajwal's uncle, and his mother Bhavani of corrupt practices to help him win. However, the court has not taken cognisance as they were not made parties in the petitions.

The court noted the petitioners proved the charges of corrupt practices beyond reasonable doubt regarding non-disclosure of material facts including the amount spent for a helicopter for star campaigners, wrong disclosure of the value of properties and business income, evading taxes, proxy voting, exorbitant expenditures, and wrong acceptance of nomination paper by Returning Officer.

**Big jolt for JD(S)**

The HC order has come as a jolt to JD(S) as Prajwal was the only MP representing the regional party, which is still nursing its wounds from the beating it took at the 2023 Assembly polls


**இயக்கத்துடன் தொடர்பு கொள்ள:**

திரு **வெ அய்யப்பன்,** உப தலைவர் **: 75501 82438**

திரு **V** கார்த்திகை ராஜன், பொதுச்செயலாளர் **: 87783 12823**

திருமதி பாக்யலட்சுமி, மேலாளர் **: 90031 25142**

**E- Mail : acmchennai2001@yahoo.co.in**

**Website : anticorruptionchennai.com**

**நேர்மை நெறி- செப்டம்பர் 2023**

Registered with the Registrar of News Papers for India,New Delhi, Regn.No.TNBIL/2003/10419

SSB/Chennai City North Divn Regn.No.TN/CCn/671/2018-20

PERMITTED TO POST WITHOUT PREPAYMENT VIDE WPP NO. TN/PMG(CCR)WPP533/2018-20



மந்திரியார் ஒரு நர்சரி பள்ளியில் ஆய்வு செய்யப்போனார்.

"இங்கே ஒரு குழந்தைக்கு ஆகும் மாதாந்திர சாப்பாட்டுச் செலவு எத்தனை?"

"அது 2000 ரூபாய்ங்க!"

"என்னது 2000 ரூபாயா? மிக அதிகம். இனி 1000 ரூபாயாகக் குறைச்சிடு!"

அடுத்து மந்திரி ஜெயிலில் ஆய்வு செய்தார்.

"ஆமா ஒரு கைதிக்கு மாதச் சாப்பாட்டுச் செலவு எவ்வளவு?"

"அது ஆவுதுங்க 5000 ரூபாய்!"

"அடேடே இத்தன குறைவா! இனிமே 10,000 ரூபாயா ஏத்திடு!"

கூட வந்த அள்ள கைக்கு ஆச்சரியம்!

"என்ன தலைவரே! நர்சரி பசங்களுக்கு குறைச்சிட்டு ஜெயில் கைதிங்களுக்கு போய் அதிகமா கொடுக்கறீங்களே, இது நியாயமா?"

"போடா பேமானி! நமக்கு பதவி போயிடிச்சுன்னா நாம என்ன நர்சரி ஸ்கூலுக்கா போவோம்?"

(ஓர் ஆங்கிலத் துணுக்கைத் தழுவி எழுதியது.)

# நேர்மை நெறி

**ஊழல் எதிர்ப்பு இயக்கத்தின் திங்களிதழ்**

**ஆசிரியர்** : **வே. கார்த்திகை ராஜன்**

**வெளியீட்டுச் செயலாளர்** : **ஜி கோவிந்தசாமி:**

Permitted to Posting 7th to 13th
Posted at Patrika Channel
(Egmore RMS/1) on 13Sept 2023
Due to corona published online)

**இம்மைச் செய்தது மறுமைக்கு ஆம் எனும் அறநிலை வாணிகன் ஆய் அலன்!**

*பெறுநர்*

IF UNDELIVERED, PLEASE RETURN TO
**ACM, 155, KONNUR HIGH ROAD,**
AYANAVARAM, CHENNAI-23

**Owned by ANTI CORRUPTION MOVEMENT, CHENNAI** and published through online on its behalf of **Thiru Govindasamy** (9841026766) from No.155, "Nambakam" Konnur High Road, Ayanavaram, and Chennai - 600023 and printed by **Thiru G Parthasarathy at VPS PRINTERS**, No 292, TH Road, Chennai-600005; Editor: **Thiru V.Karthikai Rajan (8778312823)**